பக்கங்கள்: பதின்நான்கு
மாநகர சபை, யாழ்ப்பாணம்
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 14 திங்கட்கிழமை (27.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:152

# போர் நிறுத்தம் அறிவித்தனர் புலிகள்;
# அதனை அடியோடு நிராகரித்தது அரசு!

## தற்போது கேட்பது நகைப்புக்கிடம் என்கிறார் கோத்தபாய

கொழும்பு, ஏப்ரல் 27

ஐக்கிய நாடுகள் சபை, ஜி-8 நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் உட்பட பல நாடுகள் விடுத்துள்ள வேண்டு கோள்களை ஏற்று, தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் போர் நிறுத்தம் செய்வதாக அறிவித்துள்ளனர்.

ஆனால் விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்தத்தை இலங்கை அரசாங்கம் அடியோடு நிராகரித்துவிட்டது.

விடுதலைப் புலிகள் இப்போது போர் நிறுத்தம் கோருவது அர்த்தமற்றது, நகைப்புக்கு உரியது என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்த பாய சர்வதேச ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

தாக்குதல்களை நிறுத்துமாறு அனைத்துலக அமைப்புக்கள் பலவும் இரு தரப்புக்களையும் தொடர்ச்சியாகக் கோரி வரும் நிலையில், விடு தலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பு வெளியாகி இரண்டு மணி நேரத்துக்குள் கோத்தபாயவின் (அரசின்) நிராகரிப்பு வெளியாகியது.

## மனிதப் பேரவலத்தை தடுத்து நிறுத்தும் பொருட்டு சர்வதேசத்தின் கோரிக்கையை ஏற்றுப் போர் நிறுத்தம்

### விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பிரகடனம்

கொழும்பு, ஏப். 27

ஐக்கிய நாடுகள் சபை, ஜி-8, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் விடுத்திருக்கும் வேண்டு கோள்களை ஏற்று நேற்று முதல் தாங்கள் ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தை பிரகடனப்படுத்துகின்றனர் என தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இப்போது இடமில்லை சரணடையுமாறு புலிகளிடம் சர்வதேசம் சொல்ல வேண்டும்

### நகைப்புக்குரிய விடயம் என்கிறது அரச தரப்பு

கொழும்பு, ஏப்.27

விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள போர் நிறுத்த அறிவித்தலை இலங்கை அரசு நிராகரித்துள்ளது. தற்போது போர் நிறுத் தம் தேவையற்றது என்றும் அவ்வாறு விடுதலைப் புலிகள் கோருவது நகைப்புக் குரிய ஒரு விடயம் என்றும் பாதுகாப்புச் செய லாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:-

தங்களது ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கையளித்துவிட்டு சரணடைய

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பேரவல நிலைமை குறித்து ஆராய
# பிரிட்டன், பிரான்ஸ், சுவீடனின் வெளிவிவகார அமைச்சர்கள் ஒரே நாளில் கொழும்பு வருவர்!

கொழும்பு, ஏப். 27

வன்னியில் போர்ப்பகுதியில் சிக்கியுள்ள மக்களின் நிலை குறித்து சர்வதேச சமூ கத்தி[illegible]கவலை அதிகரித்துள்ள நிலையில், பிரிட்டன், பிரான்ஸ், சுவீடன் ஆகிய நாடு களைச் சேர்ந்த வெளிவிவகார அமைச்சர் கள் நாளை மறுதினம் புதன்கிழமை இலங் கைக்கு திடீர் - முக்கியத்துவம் வாய்ந்த- விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் மில்லி பாண்ட், பிரான்ஸின் வெளிவிவ

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வலைஞர் மடம் படையினர் வசம்

கொழும்பு, ஏப். 27

பாதுகாப்பு வலயத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வலைஞர் மடம் நேற்றுக் காலை இராணுவத் தினரின் வசமாகியது என படைத்தரப்பு அறிவித்தது.

வலைஞர்மட மீட்பின் போது '200 இற் கும் மேற்பட்ட பொது மக்கள் படையின ரிடம் தஞ்சமடைந்தனர் என்றும் விடுதலைப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளிவாய்காலில் கடற்சமர்!

கொழும்பு, ஏப். 27

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கடற் பரப்பில் கடற்புலிகளுக்கும் கடற்படை யினருக்கும் இடையில் நேற்று அதிகாலை ஒருமணியளவில் கடும் சமர் இடம்பெற்றது எனப் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

முள்ளிவாய்க்கால் கடற்பகுதியூடாக புலிகளின் படகுகள் வருவதை அவதானித்த கடற்படையினர் நடத்திய தாக்குதல் சில மணிநேரம் நீடித்திருந்தது என்றும் படைத் தரப்பில் கூறப்பட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச தலையீட்டுக்கு இடமில்லை; அதை வெளிப்படுத்தியுள்ளனர் மக்கள்

### ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 27

விடுதலைப் புலிப் பயங்கரவாத வர லாற்றின் அத்தியாயத்தின் இறுதி வாசகங் களை எழுதிக் கொண்டிருக்கும் சந்தர்ப் பத்தில் மேல் மாகாண சபைத் தேர்தலில் அர சிற்கு அமோக வெற்றியைப் பெற்றுக் கொடுத்த மக்கள் சர்வதேச தலையீட்டுக்கு

(14 ஆம் பக்கம் பார்க்க)



## போர்நிறுத்தம் உடன் தேவை என்று மகிந்தவிடம் பிரி.பிரதமர் எடுத்துரைப்பு

லண்டன், ஏப்.27

உடனடியாகப் போர் நிறுத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் பிரத மர் கோர்டன் பிறவுண், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நேற் றுக் கோரியுள்ளார்.

தொலைபேசி மூலம் நேற்று ஜனா திபதியுடன் தொடர்பு கொண்டு அவர் கலந்துரையாடினார்.

மக்கள் பாதுகாப்பு வலயத்தில் சிக் குண்டுள்ள மக்களின் நிலைமை தொடர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமான போர் நிறுத்தம் புதிதாகத் தேவை என்கிறார் ஹோம்ஸ்

கொழும்பு, ஏப்.27

மோதலில் சிக்கியுள்ள மக்களின் மனி தாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்வ தற்கு உதவும் வகையில் இலங்கை அரசை இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு



ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகா ரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் கேட் டுள்ளார்.

மனிதாபிமான உத வியும், பணியாளர்க ளும் மோதல் நடைபெறும் பகுதிகளுக் குள் செல்வதற்காகப் புதிய மனிதாபிமான யுத்த இடைநிறுத்தமொன்று தேவையென ஹோம்ஸ் தாம் வெளியிட்டுள்ள அறிக் கையொன்றில் வலியுறுத்தி உள்ளார்.

இலங்கைக்கு மூன்று நாள் விஜய மொன்றை மேற்கொண்டுள்ள ஜோன் ஹோம்ஸ், பல மாத கடும் மோதல் பொதுமக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மேல் மாகாணசபை ஆளும் தரப்பின் வசமானது; ஐ.ம.சு. கூட்டமைப்புக்கு 68; ஐ.தே.கவுக்கு 30 ஆசனங்கள்

கொழும்பு, ஏப்.27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமை யிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மேல்மாகாணசபைத் தேர் தலில் 65 வீதத்திற்கும் மேலான வாக்குக ளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது.

மேல்மாகாணசபையின் 104 ஆசனங் களுக்காக சனிக்கிழமை நடைபெற்ற தேர்த லில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 65 வீதமான வாக்குகளை (1,506,115) பெற்று 68 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 30 வீத வாக்கு களைப் பெற்று (6,88,253) 30 ஆசனங்களை வென்றுள்ளது. அதேவேளை, ஜே.வி.பி. 3 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு 2ஆசனங்களும் ஜனநாயக ஐக்கிய கூட்டமைப்

(13 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்ட மட்டத்திலான மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளிடையே வலயமட்டத்தில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான மாவட்டமட்டப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் அடுத்தமாதம் 5, 6 ஆம் திகதிகளில் நடைபெறும் எனவும் உரிய பாடசாலை அதிபர்களும், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களும் மாணவர்கள் பங்குபற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் மேலதிக மாகாணப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1-267)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது ஆரம்பகால நண்பனும்,
ஆரம்பகால சாரதியுமாகிய
அமரர்
கந்தையா சிங்கராசா
அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலியில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி முன்பாக,
மானிப்பாய் கட்டுடை, யாழ்ப்பாணம்.

நண்பர்கள், பப்பாச்சி பாண்ட் வாத்தியக் குழுவினர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது ஆரம்பகால உறுப்பினரும்,
முன்னாள் பொருளாளரும், நண்பருமாகிய
அமரர்
கந்தையா சிங்கராசா
அவர்களுக்கு! 31ம் நாள் நினைவு கூர்ந்து பங்களிக்கும் பண்பான நினைவஞ்சலியில் எங்கள் உயிருள்ள ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவுடன் நிற்கும்.

அமிர்தமனை,
மனோகரா அல்வாய்.

(84728)

யாழ். வாடகைக்கார் இயக்குநர் சங்க உறுப்பினர்கள்.

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
09 ★ 10 ★ 1962



மறைவு
11 ★ 05 ★ 2005

வைத்திய கலாநிதி திருமதி தயாளன் வாசுகி

திதி: 27.04.2009 திங்கட்கிழமை

பாச பத்தினியாய் ஆசை அம்மாவாய் அரவணைத்து
நேச நலிந்தோர் இடர்களை பணிபுரிந்த தாயே
ஞால மீதில் நம்மவர் எல்லாம் போற்றி ஏற்றும்
சீலமிகு தாயே எம்மைச் சிறப்பாய் ஆண்டருள்வாய்

"துவாரகை"
கைதடி.

(84664)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மயில்வாகனம் இராசமணி



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் சுவீடனை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் இராசமணி 16.04.2009 வியாழக்கிழமை சுவீடனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் நாகசோதியின் (சுவீடன்) அன்புத் தாயாரும் பூநீயின் (சுவீடன்) அன்பு மாமியும் சிந்துஜா, ஜஸ்மி, ஆர்த்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2009) திங்கட்கிழமை சுவீடனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி, மல்லாகம்.

தகவல்: திருமதி கனகசோதி (மைத்துனி).


## கட்டட அடிக்கல் நாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.27

ஸ்ரீ இராமகிருஸ்ண சேவாச்சிரம சங்கத்தின் குருமூர்த்திகளுக்கான கட்டட அடிக்கல் நடும் விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தாவடி காந்தி கலை வளர்ச்சி மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அடிக்கல் நடவுள்ளார். (1-6)

## கூட்டுறவுத்துறை தொடர்பான கட்டுரைப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.27

வர்த்தக சந்தைப்படுத்தல் அபிவிருத்திக் கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சு சாதாரண, உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இப் போட்டிக்கு ''மாறி வரும் சமூக பொருளாதார பின்னணியில் கூட்டுறவுத் துறையின் பொறுப்பு மற்றும் தலைவர்களின் பங்களிப்பு'' என்னும் தலைப்பில் 2000 தொடக்கம் 2500 சொற்கள் கொண்டதாக தமிழ், சிங்கள மொழிகளில் கட்டுரைகள் எழுதப்பட வேண்டும்.

அடுத்தமாதம் 31 ஆம் திகதி போட்டியின் இறுதித் தினமாகும்.

போட்டி தொடர்பான மாதிரி விண்ணப்பப் படிவம், போட்டி விதிகள் என்பன பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் மாணவர்களை போட்டியில் கலந்துகொள்ள ஊக்குவிக்குமாறும் உரிய பாடசாலைகளை கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர். (1-6-7-267)

## திருநெல்வேலிச் சந்தை துரிதகதியில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.27

திருநெல்வேலி மக்கள் சந்தையின் புனரமைப்புப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

திருநெல்வேலி மக்கள் சந்தையில் மீன் மற்றும் மரக்கறிகளின் விற்பனை நிலையங்கள் உடைக்கப்பட்டு பெரிய அளவிலான இடவசதியைக் கொண்ட பெரிய கட்டடத்தொகுதியை நிர்மாணிக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் திருநெல்வேலி சந்தைக் கட்டடத் தொகுதியின் முன் பக்கத்தில் கடைத் தொகுதிகளும் அமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (04-07-224)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஏப்.27

யாழ்.மாவட்ட விளையாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெறும் ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் இன்று திங்கட்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* தெல்லிப்பழை எதிர் நெடுந்தீவு.
* சங்கானை எதிர் யாழ்ப்பாணம்.
* சாவகச்சேரி எதிர் உடுவில்.
* மருதங்கேணி எதிர் பருத்தித்துறை.
* கரவெட்டி எதிர் நல்லூர்.
* காரைநகர் எதிர் வேலணை.
* சண்டிலிப்பாய் எதிர் ஊர்காவற்றுறை.

கோப்பாய் பிரதேச செயலகம் இரண்டாம் சுற்றில் இருந்து விளையாடும். (50-86)


## மரண அறிவித்தல்

### பிரகாசம் பொன்னையா



சரவணையைப் பிறப்பிடமாகவும் நாரந்தனை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பிரகாசம் பொன்னையா (24.04.2009) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரகாசம் - ஆரோக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அவூறான் - மதலேனாள் தம்பதியினரின் அன்பு மருமகனும் மேரிராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான றோசலின், ராசையா, லூர்த்து, இராசகுட்டி மற்றும் திரேசம்மா, எலிசபெத் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அந்தோனி, லூர்த்து, குருசு மற்றும் குண்டுமணி, இராசதுரை, இராசசூரி ஆகியோரின் மைத்துனரும் அன்ரன் றேமன், அருணா, றிச்மன், லூட்ஸ், சீவம், ரூபன், அலிஸ், எஸ்ரா, ஏபன், கிளமன்ற், றெஜினோல்ட் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சோதி, தேவராசா, விசி, எமில், சிறி காலஞ்சென்ற சாள்ஸ் மற்றும் டேனியல், அமலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.04.2009) மு.ப. 10 மணிக்கு இராயப்பர் சின்னப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



திருமதி
குணலோகநாயகி ராஜரட்ணம் (B.A)
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

யாழ்ப்பாணம் சுதுமலையைப் பிறப்பிடமாகவும் யாழ். ஸ்டான்லி வீதியை வசிப்பிடமாகவுக் கொண்டிருந்த திருமதி குணலோகநாயகி ராஜரட்ணம் 25.04.2009 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து ரத்தினபூபதியின் கனிஷ்ட புதல்வியும், ஆனந்தராஜா ராஜரட்ணத்தின் (Project Director, CARE International) அன்பு மனைவியும், சர்வானந்தா (Ceylinco Life Insurance, Wellawatte), அனுஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், குணமணி, குணமலர், குணதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி செல்வராணி அழகராஜாவின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஈமக்கிரிகைகள் எதிர்வரும் (29.04.2009) புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/1, நெல்சன் பிளேஸ்,
கொழும்பு - 06

தகவல்
மகன் (சர்வானந்தா)
தொலைபேசி: 0777751207

## தவறிவிட்டது

காக்கைதீவு, ஆனைக்கோட்டை என்னும் முகவரியுடைய முத்துச்சாமி சுதர்சன் என்பவருடைய தே.அ. அட்டை இல (891003773V), வி.பே.அ. அட்டை என்பன 21.04.2009 அன்று ஆனைக்கோட்டை சந்திக்கும், ஆறுகால் மடத்திற்கும் இடையில் தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவினால் சன்மானம் வழங்கப்படும்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் 27.04.2009 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ றாஜீவ்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

எமது நிறுவனத்தின் மற்றுமோர் சேவை
April 27 முதல்
மணமக்கள் சங்கமமாகும்
"கெட்டி மேளம்" திருமண சேவை
Keddy Melam Wedding Service
(நிறுவன மயப்படுத்தப்பட்ட நம்பகரமான துரித சேவை)
உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை விரைவாகவும் விரும்பியபடியும் இனிதே நிறைவேற்றிக் கொள்ளவும் அந் நிகழ்வுகளை சிறந்த முறையில் படம் பிடித்திடவும் (Video & Photo)
எமது நிறுவனத்தில் அடையாள அட்டை, பாஸ்போட் புகைப் படங்களை படம் பிடித்து உடனுக்குடன் பெற்றுக்கொள்ள 80/= மட்டுமே
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலையகம்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
E.Mail: moorthydigital@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வன்னிக்கு விஜயம் செய்வதற்கான கட்டுப்பாட்டின் சூத்திரம் இதுதான்!

வன்னியில் இன்று தமிழ்மக்கள் அனுபவிக்கும் கஷ் டங்கள், அவலங்கள், துன்ப துயரங்கள் சொல்லுந்தர மன்று.

சர்வதேசத்தின் கண்களுக்கு அவற்றை மூடி மறைக்கும் திட்டமிட்ட நடவடிக்கைகள் ஆளுந் தரப்பால் கன கச்சிதமாக முன்னெடுக்கப்படுகின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

மக்கள் பேரவலம் கொடூரமாய்க் கட்டவிழும் யுத்தக் களமுனையை ஒட்டிய பிரதேசங்களுக்கு ஊடகவியலாளர்கள், மனித நேயத் தொண்டுப் பணியாளர்கள், ஐ.நா.முகவர் அமைப்பினர் எனப் பல தரப்பினரும் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை - அல்லது கடுமையான கட்டுப்பாடு - இந்த உள்நோக்கப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டது என்பதும் பரகசியம்.

மோதல் பகுதிகளுக்கு சுயாதீன வட்டாரங்கள் சென்று வருவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என மனித உரிமை அமைப்புகள், ஊடக இயக்கங்கள், சர்வதேச சமூகம் உட்பட்ட பலம் வாய்ந்த தரப்புகள் வற்புறுத்தியும் கூட, 'பாதுகாப்புக்கு முன்னுரிமை' என்ற காரணத்தைக் காட்டி, அக் கோரிக்கைகளை நிராகரித்து வந்திருக்கின்றது இலங்கை அரசுத் தலைமை.

மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு விதிக்கப்பட்டுள்ள இத் தடையின் தாற்பரியம் என்னவென்பதை இப்போது நிகழ்ந்துள்ள ஒரு சம்பவம் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றது.

மோதல் இடம்பெறும் பிரதேசங்களை ஒட்டிய பகுதிகளுக்குச் சென்றுவர அனுமதிக்கப்பட்ட ஒருவர் மூலம், தமிழகத்தில் பற்றிக்கொண்ட ஒரு சிறு நெருப்புப் பொறி 'ஒரு முழுக்காடே வெந்து தணிந்தது' போன்ற பெரும் அக்னிச் சுவாலைப் பிரதிபலிப்பை தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்கிறது. ஓர் அதிரடி அரசியல் நிலை மாற்றத்தை ஏற்படுத்தும் சூறாவளி சர்ச்சையையே அது உருவாக்கியிருக்கின்றது.

இந்தியாவைச் சேர்ந்த தமிழில் சரளமாகப் பேசும் ஆற்றலுள்ள சுவாமி ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி, 'வாழும் கலை' பயிற்சி மையம் உட்படப் பல்வேறு இந்து சமயக் கட்டமைப்புகள் மூலம் ஆத்மீகப் பணியாற்றி வருபவர். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நெருங்கிய தொடர்பாடலைக் கொண்டவர் என மதிக்கப்படுபவர். ஜனாதிபதி ராஜபக்ஷ சகோதரர்களில் சிலர் தமது மனைவியர் சகிதம் சுவாமிஜியிடம் 'வாழும் கலைப் பயிற்சி' பற்றிய தியானங்களைப் பயின்று வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. ஜனா திபதி ராஜபக்ஷவிடம் இவருக்கு நேரடியாக அதிக செல்வாக்கு இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த சுவாமி ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி, அரசுத் தலைமையிடம் தமக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி வன்னிக்குச் சென்று, அங்கு இடம்பெயர்ந்து, வன்னி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் பேரவலப்படும் லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்களை நேரில் சந்தித்தார். அந்த மக்களின் இழி நிலைமை பற்றிய உண்மைகளை நேரில் கண்டறிந்த அவர், அவற்றை வீடியோப் படமாக்கவும் தவறவில்லை.

அந்த விஜயத்தை முடித்துக்கொண்டு இந்தியா திரும்பிய சுவாமி, இலங்கையில் தமக்குக் கிடைத்த அனுபவத்தை சத்தம் சந்தடியின்றி ஓர் அரசியல் பிரமுகரிடம் பகிர்ந்து கொண்டமை பெரும் அதிரடி அரசியல் மாற்றத்துக்கே வழி செய்திருக்கின்றது.

''வாழும் கலைப் பயிற்சி நிறுவுநர் காட்டிய வீடியோப் படங்களைப் பார்த்து நான் பேரதிர்ச்சி அடைந்துள்ளேன். இதுவரை தெரியாத பல உண்மைகளைக் கண்டறிந்து பெரும் வேதனையில் உறைந்து போயுள்ளேன்'' - என்று அகில இலங்கை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா பகிரங்கமாகப் பெரு விசனத்தோடு வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஈழத் தமிழர் விடயத்தில் சற்றுத் தூக்கி எறிந்து நடக்கும் போக்குடன் செயற்பட்டு வந்த செல்வி ஜெயலலிதாவை, இந்த ஒரு வீடியோக் காட்சி அதிரடியாக மாற்றிவிட்டது என்பதைத் தமது உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் விதத்தில் ஈரோட்டில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜெயலலிதா பகிரங்கமாகக் கூறிய கருத்துகள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

''இப்படி வாழ்வதை விட சாவதே மேல் என்று எண்ணத் தோன்றும் அளவுக்கு மோசமான நிலையில் இலங்கைத் தமிழர்கள் உள்ளனர். அத்தனை தூரம் அடிமைகள் போல - கைதிகள் போல - மிகக் கேவலமாகவும், கொடூரமாகவும் அவர்கள் அங்கு நடத்தப்படுகின்றனர்'' - எனக் குமுறியிருக்கின்றார் ஜெயலலிதா.

மொத்தத்தில் ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரே தீர்வு தனி ஈழம்தான் என்ற ஒரே முடிவுக்கு வந்துவிட்ட இந்தியத் தலைவர்களின் பட்டியலில் இப்போது ஜெயலலிதாவும் இணைந்துகொண்டு அதைப் பகிரங்கப்படுத்தும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இதுவரை காலமும் தமிழக முதல்வர் மு.கருணாநிதிபோல ஈழத் தமிழருக்குத் தனித் தேசம் கிடைத்தால் மகிழ்வோம் என்று மட்டுமே கூறிவந்தவர் ஜெயலலிதா. இப்போது அந்த நிலைப்பாட்டை அ.தி.மு.க. தலைவி மேலும் தீவிரமாக்கி விட்டார்.

தமது அ.தி.மு.க. ஆதரவுடன் புதிய இந்திய மத்திய அரசு அமையுமானால் - தங்கள் சொல் கேட்கும் மத்திய ஆட்சி ஏற்படுமானால் - தனி ஈழம் அமைப்பதற்கான நடவடிக்கையைத் தாம் எடுப்பார் என்றும், அதுவே ஈழத் தமிழர்களுக்கு ஒரே தீர்வு என்றும் ஜெயலலிதா அறிவித்திருக்கின்றார்.

இந்த அறிவிப்பு மூலம் தனி ஈழத்தை மட்டுமே ஒரே தீர்வாகக் கருதும் வைகோ, டாக்டர் இராமதாஸ், திருமாவளவன், விஜயகாந்த் போன்ற தமிழக அரசியல் கட்சிகளின் தலைவர்களின் பட்டியலில் அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் இணைந்து கொண்டுவிட்டார்.

இத்தகைய அதிரடி அரசியல் நிலைப்பாடு மாற்றத்தை அவருக்கு ஏற்படுத்தியது இந்திய ஆத்மீகத் தலைவர் சுவாமி ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவருக்குக் காட்டிய வீடி யோப்படம்தான்.

இலங்கை அரசுத் தலைவருடனான தனிப்பட்ட நட்புறவுடன் வன்னி சென்று மீண்ட ஓர் ஆத்மீகத் தலைவரின் ஒரு சிறிய விஜயமே இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த முடியுமாயின், சுதந்திரப் பார்வையாளர்கள் அங்கு சென்று வருவதற்கும், உண்மையைக் கண்டறிந்து பகிரங்கப்படுத்துவதற்கும் கட்டுப்பாடின்றி அனுமதிக்கப்படுமானால் நிலைமை என்னவாகும்?

பொய்கள், புளுகு உரைகள், பித்தலாட்ட அறிக்கைகள், முழு வெற்று வேட்டுப் பிரகடனங்கள் போன்றவை மூலம் உலகின் முன் வன்னி நிலைமை குறித்துக் கட்டி எழுப்பப் பட்டிருக்கும் மாயவலைக் கோபுரம் அடியோடு தகர்ந்து உண்மை அம்பலமாகிவிடாதா?

வன்னி நிலைமையைக் கண்டறியும் விஜயங்களுக்குத் தடை விதிக்கும் கட்டுப்பாட்டின் சூத்திரம் இதுதான்!

'இறைமையுள்ள ஒரு நாட்டின் உள் விடயங்களில் தான் தலையிட முடியாது' - என்ற சுயாதீன கைவிலங்கை சர்வதேசம் தனக்குத் தானே பூட்டிக்கொண்டு நின்றால் இத்தகைய பேரவலக் கொடூரங்களுக்கு வழி சமைத்துக் கொடுக்கும் கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளைப் பார்த்துக் கொண்டு விளாவிருப்பதைத் தவிர வேறு வழியேயில்லை.

# போர் நிறுத்தம் கொண்டுவர அமெரிக்கா ராஜதந்திர முறையில் தீவிர முயற்சி

**நேற்று (26.04.2009) 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான அரசியல் விமர்சனத்தின் ஒருபகுதி.**

25 வருடகாலப் போரை முடிவுக்கு கொண்டு வரும் நிலையில் பாதுகாப்புப் படைகள் உச்சக்கட்டப் போரில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வேளையில் போரை நிறுத்தும்படியான சர்வதேச நெருக்குதலும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

இராணுவம் கைப்பற்றுவதற்கு இன்னும் 10 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பு மட்டுமே எஞ்சியிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கான பாதுகாப்பு வலயமாக ஒதுக்கப்பட்டுள்ள போர் நிறுத்தப் பகுதியும் இதில் அடங்குகிறது. நீள் சதுரமாக அமைந்துள்ள பகுதியில் நந்திக் கடல் ஏரி மேற்குப்புறமாகவும் கிழக்கில் இந்துசமுத்திரமும் அமைந்துள்ளன. கடல் பரப்பில் கடற்படைக் கலங்கள் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள நிலையில் இராணுவத்தின் நான்கு படைப் பிரிவுகள் ஏனைய பகுதிகளில் முற்றுகையில் ஈடுபட்டுள்ளன.

கடந்த வாரம் கொமாண்டோப் படைகளும் விசேஷட படை அணிகளும் ஒரு காலத்தில் கடற்புலிகளின் முல்லைத் தீவு நோக்கிய பிரதான தளமாக இருந்த பகுதியைக் கைப்பற்றினர். சாலைக்கு அருகில் உள்ள இப்பகுதி இப்போது இராணுவத்தின் வசம் வந்துள்ளது. இப்பகுதியை இராணுவம் வெற்றிகரமாக ஊடுருவி தம்வசப்படுத்தியதை அடுத்து இடம் பெயரும் மக்கள் பெருவாரியாக வெளியேறி வருவதற்கு துணைபுரிந்தது. மக்கள் இவ்வாறு பெரும் எடுப்பில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரத் தொடங்கியது அரசுக்கே பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது. போர் நிறுத்தப் பகுதிகளில் சுமார் 70 ஆயிரம் மக்கள் இருப்பதாகவே அரசு கூறிவந்தது. சர்வதேச அமைப்புக்களிடமும் அவ்வாறே கூறப்பட்டு வந்துள்ளது. ஆனால் இப்போது 1,09, 000 பேர் வரை இருக்கலாம் என்று கணக்கிடப்படுகிறது. மக்கள் இடம் பெயர்வு அதிகரிக்க அதிகரிக்க எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இடம்பெயரும் மக்களின் துன்பங்கள் பற்றிய கதைகள் ஒரு புறமிருக்க பொதுமக்கள் மத்தியில் பாதுகாப்பு அரண்களை ஏற்படுத்திக் கொண்டு எவ்வாறு புலிப் படையினர் ஆட்டிலறித் தாக்குதல்களை நடத்தினார்கள் என்பது பற்றியும் புலித் தலைவர்கள் குழுகுழுவாக மக்கள் மத்தியில் மறைந்திருந்தார்கள் என்பது பற்றியும் இராணுவத்தினருக்குப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்த வண்ணமிருந்தன.

### தலைவர்கள் பற்றிக் கேள்விக்குறி

இவர்கள் இப்போதும் போர் ஒய்வுப் பகுதியில் மக்களுடன் சிக்குண்டு இருக்கிறார்களா அல்லது அங்கிருந்து தப்பிச் சென்று விட்டார்களா என்பது கேள்விக்குறியாகவிருக்கின்றது.

கடந்த வாரம் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றுக்குப் பதில் அளித்த இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தமது படைகளின் சாதனைகள் குறித்து பெருமையாகவே கூறிக்கொண்டார். தமது படைகளின் செயற்பாடு தரைப் பகுதிகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறிய இராணுவத் தளபதி ஏனைய புலித்தலைவர்கள் போலவே பிரபாகரனும் தப்பிவிட முடியாது என்றும் கூறினார். இருந்த போதிலும் கடற்பகுதியின் செயற்பாடு தமது ஆளுகைக்குட்பட்டிருக்கவில்லை என்று தெரிவித்துள்ள அவர் கடல் மார்க்கமாக பிரபாகரன் தப்பிக்கக்கூடும் என்றும் கூறினார்.

கடற்படையினர் தமது கடற் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியிருப்பதாக கடந்த வியாழக்கிழமை அறிவித்தனர். கடல் மார்க்கமாகப் பிரபாகரன் தப்பிவிட முடியாது என்றும் அவர்கள் அடுத்தநாள் தெரிவித்தனர்.

புலிப்படைத் தலைவர்கள் தப்பிச் சென்றுவிட முடியாத படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். பிரபாகரன் இன்னமும் போர் நிறுத்தப்பகுதிகளிலேயே இருப்பதாக தாம் நம்புவதாக இராணுவத்தின் 58 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி சவீந்ரா சில்வா வன்னிக்கு விஜயம் செய்திருந்த ஊடகவியலாளர்களிடம் கடந்த வெள்ளிக் கிழமை கூறியிருந்தார். புலிகளின் தலைவர் பிரபாகரன் எஞ்சியுள்ள தமது போராளிகளுடன் வானொலித் தொடர்புகள் மேற்கொண்டதை இடைமறித்துக் கேட்டிருப்பதாக இராணுவத்தினர் கூறியிருந்தார்கள். ஆனால் இந்த தொடர்புகள் எங்கிருந்து மேற்கொள்ளப்பட்டது என்பது தெரிவிக்கப்படவில்லை.

## முல்லைத்தீவு தொடர்பான செய்மதி படங்களை அமெரிக்கா வெளியிட்டது

### வெளிநாடுகள் கவலை

எஞ்சியுள்ள 10 சதுர மீட்டர் நிலப் பரப்பை கைப்பற்றுவதற்கு அரச படைகள் முயலும்போது போர் மேலும் மோசமாக விரிவடையலாம் என்று பல வெளி நாடுகள் கவலை கொண்டுள்ளன.

பக்கத்து நாடான இந்தியா இரு தூதுவர்களை கடந்த வெள்ளியன்று இலங்கைக்கு அனுப்பியிருந்தது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம். கே. நாராயணன் வெளிநாட்டு உறவுகள் அமைச்சின் செயலர் சிவ்சங்கர் மேனன் இலங்கையில் ஜனாதிபதி ராஜபக்ஷவுடனும் பாதுகாப்பு செயலர் கோதபாய ராஜபக்ஷவுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

தமிழ் நாட்டில் அரசியல் கட்சிகளால் காங்கிரஸ் அரசுக்கு விடுக்கப்படும்

## வெளிநாட்டு அமைச்சர்களுடன் ராஜாங்க அமைச்சர் தொடர்பு

நெருக்குதல்கள் பற்றி இரு தூதுவர்களும் இலங்கைத் தலைவர்களுக்கு விளங்கப்படுத்தியதாகத் தெரியவருகின்றது. இலங்கையில் பொது மக்கள் கொல்லப்படுவது அதிகரித்து வருவது குறித்தும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

### அமெரிக்க அரசு கவலை

வன்னியிலிருந்து மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்வது குறித்து அமெரிக்க அரசு கவலையடைந்துள்ளது. ஏப்ரல் 21 ஆம் திகதி ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் றொபேர்ட் வூட் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் போர்நிறுத்தப் பகுதிக்குள் இரு தரப்பிலிருந்தும் குண்டுகள் வீசப்படுவது தொடர்கிறது. ராணுவநடவடிக்கை அதிகரிக்கப்பட்டிருப்பதால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது அதிகரிப்பது தொடர்பான நம்பகமான தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் போர் நிறுத்தப் பகுதிகளில் கண் மூடித்தனமாக குண்டு வீச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம். போர் நிறுத்தப் பகுதியிலிருந்து வெளியேற முற்படும் மக்கள் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்வது அல்லது தாக்குதல் நடத்துவது பற்றிய தகவல் கிடைத்துள்ளது.

பொதுமக்கள் போர் நிறுத்தப் பகுதியிலிருந்து வெளியேற அனுமதிக்கும்படி புலிகளைக் கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுமக்களை அப்புறப்படுத்தவும் நிவாரணப் பணிகளுக்கு அனுசரணை வழங்கவும் ஐ.நா.அலுவலர்களை அங்கு அனுமதிக்க வேண்டும் என்ற ஐ.நா செயலாளர் நாயகத்தின் கோரிக்கையை நாங்கள் பலமாக ஆதரிக்கின்றோம்.

போர் நிறுத்தப் பகுதிகளிலிருந்து வெளியேறி வந்துள்ள மக்களைத் தங்க வைத்துள்ள நலன்புரி நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்குச் சென்று பணிகளை மேற்கொள்ள உள்ளூர் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரையும் ஐ.நா. பணியாளர்களையும் அனுமதிக்கும்படி இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றோம்.

போர் நிறுத்தப் பகுதிகளில் எஞ்சியுள்ள பொதுமக்களை வெளியேற்றுவதற்காக இலங்கை அரசாங்கம் ராஜதந்திர முறைகளைப் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்துகின்றோம் என்று ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் கூறினார்.

### ராஜாங்க அமைச்சின் அக்கறை

கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கும் போது கூறியதாவது:-

ராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்ரன், நோர்வேஜிய வெளியுறவு அமைச்சருடன் இது விடயமாக ஆலோசித்திருக்கிறார். வேறு வெளியுறவு அமைச்சர்களை சந்தித்தபோது இந்த விடயத்தை விவாதித்திருக்கிறார். யார் யாருடன் எல்லாம் பேசினர் என்பதை என்னால் சொல்ல முடியாது . அவர் இதில் மிகவும் அக்கறை கொண்டுள்ளார். இதில் அமெரிக்கா மட்டுமல்ல பல நாடுகள் அக்கறை கொண்டுள்ளன. எமது வளங்களை ஒன்றாக்கி நெருக்கமாக ஒத்துழைத்து என்ன செய்யலாம் என்று பார்க்கின்றோம். இலங்கை அரசாங்கமோ, விடுதலைப் புலிகளோ நாம் சொல்வதைக் கேட்கிறார்கள் இல்லையென்பது உங்களுக்குத் தெரியும்.

ஆனால் நாங்கள் தொடர்ந்து நெருக்குதல் கொடுக்கப்போகிறோம். நாம் செயல்பட்டாக வேண்டிய மிக முக்கியமானதொரு வெளி நாட்டுறவு தொடர்பான கொள்கை, நாம் தொடர்வோம். பொது மக்கள் தொடர்ந்து துன்புறமாட்டார்கள் என்பதை உறுதி செய்யவேண்டும்.

சர்வதேச சமூகம் இந்த மோதலை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று விரும்புகின்றது. வன்முறை ஏற்றுக் கொள்[illegible]ாத அளவை எட்டி விட்டது. அதி[illegible] தகமில்லை. மோதல்களை நிறுத்த ஒது நிலைக்கு சம்பந்தப்பட்ட தரப்புகளை தள்ளியாக வேண்டும். தரை நிலைமைளில் எமக்கு அதிக அக்கறையுண்டு. பொதுமக்கள் காப்பாற்றப்பட வேண்டும்.

எனவே இரண்டு தரப்பினரையுமே பொதுமக்களைக் காப்பாற்றுவதும் அவர்களுக்கு மனிதாபிமான விநியோகங்கள் போய்ச் சேர்வதை உறுதிப்படுத்துவதும் மிக முக்கியம் என்பதை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கான எமது ராஜதந்திர கருவிகள் எல்லாவற்றையும் பாவிக்க விரும்புகின்றோம். இது மிகவும் கடினம் தான் என்றார்.

### கடினமான நிலைப்பாடு

இலங்கை அரசின் மீது கடினமான ஒரு நிலைப்பாட்டை அமெரிக்கா எடுக்கக் கூடும் என்று இது காட்டுகின்றது.

கடந்தவாரம் வெளி உறவுகள் தொடர்பான குழுவின்முன் கருத்து வெளியிட்ட போது ராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் இதனை வெளிப்படுத்தினார்.

ராஜாங்க அமைச்சர் புலிகள் பற்றிக் குறிப்பிட்டபோது அவர்களை கிளர்ச்சியாளர்கள்(insurgents)என்றுதான் குறிப்பிட்டார். பயங்கரவாதிகள் (Terrorists) என்று குறிப்பிடவில்லையென்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இதிலிருந்து ஒபாமா நிர்வாகம் இலங்கை அரசாங்கம் தொடர்பான கொள்கையை புஷ் நிர்வாகத்தைப் போலன்றி அணுகுமுறையை மாற்றிக் கொள்ள உத்தேசித்திருப்பது தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் அலுவலகம் முறையாக விடுத்த ஓர் அறிக்கையில் பாதுகாப்பு வலயத்தின் மீது நடத்தப்படும் ஷெல் வீச்சை நிறுத்தும்படியாக கேட்டுக் கொண்டது. தப்பிவந்துள்ள பொது மக்களை சர்வதேச உதவி அமைப் புக்களும் ஊடகவியலாளர்களும் சென்று சந்திப்பதைத் தடை செய்யவேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டது. சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மதித்து நடக்கும்படியும் சம்பந்தப்பட்டதரப்புக்களை ஒபாமாவின் நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

### செய்மதி நிழற்படம்

அதற்கு முந்திய தினம் வழக்கத்துக்கு மாறான ஒரு நடவடிக்கையில் முல்லைத்தீவு பிரதேசத்தின் செய்மதி நிழற் படத்தினை அமெரிக்கா வெளியிட்டிருந்தது.

சர்வதேச நிறுவனங்களையும் ஊடகங்களையும் அப்பிரதேசத்திற்கு செல்ல விடாமல் தடுக்கப்பட்டிருந் தாலும் கூட அங்கே என்ன நடக்கிறது என்பதை அமெரிக்காவால் கண்டறிய முடியும் என்ற செய்தியை இலங்கை அரசுக்கு தெரிவிப்பதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டிருப்பதாகக் கருதமுடியும். பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்தைக் காட்டுவதாக அந்தச் செய்மதிப் படம் இருந்தது. (ப)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 15 | 28.04.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | பி.இ. 1.52 வரை |
| நட்சத்திரம்: | ரோகிணி |
| | மு.ப. 10.03 வரை |
| சுபநேரம்: | 10.28 - 11.58 |
| ராகுகாலம்: | 02.58 - 04.28 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரைப் புத்தாண்டில்
# 3,500க்கும் அதிகமான மரக்கன்றுகள் குடாநாட்டில் நடப்பட்டன
### கூட்டுறவு உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பரணம், ஏப்.27

மரநடுகைத் திட்டத்தின் மூலம் யாழ்.குடாநாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களால் இதுவரைக்கும் 3500 க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இத்தகவலை மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் சித்திரைப் புத்தாண்டு தினத்தில் மேற்கொள்ளப்பட்ட பயன்தரும் மரக்கன்று நடும் திட்டத்தில் சகல கூட்டுறவு அமைப்புக்களும் முழுமையான பங்களிப்பை வழங்கியுள்ளன. இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்ததை விடவும் அதிகமான மரக்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன. நடப்பட்ட மரக்கன்றுகளைச் சரியான முறையில் பேணும் முயற்சியிலும் கூட்டுறவுப் பணியாளர்கள் ஈடுபட வேண்டும் எனவும் தெரிவித்தார். (04-224)


31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம் 11 . 05 . 1948

மறைவு 29 . 03 . 2009

அமரர்

கந்தையா சிங்கராசா

(ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியர், நாடகக் கலைஞர், சாரதி)

நினைவு நாள் :- 27.04.2009 திங்கட்கிழமை

விண்ணை உறைவிடமாக்கி
கண்ணில் நீர் சொரிய வைத்து
என்னைத் தனிமையாக்கிவிட்ட மன்னவனே
என்னுயிர் ஆறாது ஆறாது ஐயா.

'அமிர்த மனை',
மனோகரா, அல்வாய்.

சி.அமிர்தகுமாரி,
(மனைவி).


## சந்தை விலை வீழ்ச்சி; கால்நடைத் தீவனமாகும் கோவா!

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ்.குடாநாட்டில் கோவாவின் விலை வீழ்ச்சியடைந்ததையடுத்து அவற்றை கால்நடைத் தீவனமாக விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் போன்ற சந்தைகளில் கோவா கிலோ 5 ரூபா முதல் 10 ரூபா வரையே விற்கப்படுகின்றது. இதனால் இவற்றைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர்.

கோவாவின் விலை வீழ்ச்சியால் நட்டமுறும் விவசாயிகள் அவற்றைக் கால்நடைகளுக்குத் தீவனங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனைவிட சில தோட்டங்களில் கோவாப் பயிர்கள் அழிக்கப்பட்டு, மீளவும் வேறு பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்றவகையில் தயார் செய்யும் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். (04-224)

## அச்சுவேலிப் பகுதியில் பால் விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், ஏப்.27

கோப்பாய் கால்நடை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்அச்சுவேலிப் பகுதியில் விரைவில் பால் விற்பனை நிலையம் ஒன்றை திறந்து வைக்கவுள்ளது.

இவ்வாறு கோப்பாய் கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கே.சிவபாலன் தெரிவித்தார்.

இந்தப் பால் விற்பனை நிலையம் அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரிக்கு அருகில் திறந்து வைக்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (04-224)


### தவறிவிட்டது

சுன்னாகம் சூராவத்தை என்னும் முகவரியுடைய செல்வராசா சுதாகர் என்பவரின் தேசிய அ. அட்டையும் (801111971V), இராணுவ அ.அட்டையும், ஊழியர் அ.அட்டையும் யாழ்ப்பாணத்துக்கும், சுன்னாகத்துக்கும் இடையில் பேர்ஸ்சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் செ.சுதாகர், மே/பா, பத்திரிகைக் கடை மைலனி, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்.

### காணி தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் பிரதான வீதிகளில் 1-2 பரப்புக்காணி தேவை.
இடைத்தரகர் தேவையில்லை.
தொடர்பு:- 0771744581



வீட்டுக்கிருத்திய அழைப்பும் 41 ஆம் நாள் நினைவஞ்சலியும்



திருமதி
அன்னலட்சுமி அருணாசலம்

தோற்றம் 06.01.1934

மறைவு 18.03.2009

கடந்த 18.03.2009 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எனது அன்பு மனைவியின் வீட்டுக்கிருத்தியம் இன்று (27.04.2009) திங்கட்கிழமை நண்பகல் கேணிக்கரை அளவெட்டியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர வதிவிடம் :
அம்பனை, தெல்லிப்பழை.
கைதடி - நாவற்குழி, மறவன்புலோ,
தற்காலிக வதிவிடம்: கேணிக்கரை, அளவெட்டி.

செ.அருணாசலம்
(கணவர்)



நீங்காத நான்காம் ஆண்டு நினைவுகளில்..



தோற்றம் 10 . 09 . 1941

மறைவு 11 . 05 . 2005

அமரர்

நடராசா கணேசராஜா

(Rtd.Laboratory Asst; Co-Operative Wholesale Establishment.
Rtd Distillery/Warehouse officer, state Distilleries corporation)

திதி: 27.04.2009 (திருதியை)

ஆயிரம் ஆயிரம் உறவுகள் இருப்பினும்
அப்பா—உங்களைப் போல் வருமா?
இதயத்தில் இறையாகி உள்ளத்தில் உயர்வாகி
வாழ்விற்கு வழிகாட்டியாகி, தெய்வத்துள் தெய்வமாகிய,
எங்கள் அப்பாவே—ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்!

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



Affordable and Internationally Recognised

JAFFNA

MBA

Master of Business Administration

Specialize in
Marketing
Human Resources
Information Systems
Finance

Sikkim
Manipal University

An integrative program designed to provide an advanced course in management for those seeking senior positions in industry, commerce and public services. The core subjects of the Manipal MBA are aimed at developing knowledge and skills in fundamental management disciplines, improving the decision making abilities of participants and producing managers of the highest quality.



The most accepted foreign MBA programme in Srilanka with over 500 students enrolled

Admissions now on

May 2009 intake

For information contact | Neergi 077 9863666

FIRST BATCH SUCCESSFULLY COMPLETED IN JAFFNA

Manipal
INSPIRED BY LIFE

Manipal International Study Centre
IIS CITY CAMPUS
#200,Sivan Pannai Road, Jaffna.
T.P: 021 222 8060
Web: www.iiscitycampus.com


## விழிப்புக் குழுவினரால் 15 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது

யாழ்ப்பாணம்,ஏப்.27

காதி அபூபக்கர் வீதியில் உள்ள பள்ளி வாசலுக்குச் சமீபமாகக் குடியிருக்கும் ஒருவரது வீட்டில் இருந்து 15 லீற்றர் கசிப்பு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.முஸ்லிம் வட்டாரம் கொட்டடி, நாவாந்துறை விழிப்புக் குழுவினால் கைப்பற்றப்பட்டு யாழ்.பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஏற்கனவே விழிப்புக் குழுவினரால் இராணுவத்தின் ஒத்துழைப்புடன் மேற்குறித்த வீடு சுற்றி வளைக்கப்பட்டு 20 லீற்றர் கசிப்புக்குரிய கோடா மற்றும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டதோடு குறித்த நபரும் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (7)

## மீண்டும் அதிகரிக்கும் வழிப்பறித் திருட்டுக்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.குடாநாட்டில் வழிப்பறித் திருட்டுச் சம்பவங்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளன.

இந்த வழிப்பறிப்பும், பிக்பொக்கற் திருட்டும் கூடுதலாக பஸ்களிலேயே இடம்பெற்று வருகின்றன.

பஸ்களில் பயணம் செய்யும் மக்கள் நெருக்கடியில் அவதிப்படும் சமயம் பார்த்து அதில் ஏறி பயணம் செய்யும் விஷமிகள் பிக்பொக்கற் அடிப்பதிலும் பெண்களின் கைப்பைகளை தந்திரமாகத் திருடிச் செல்வதும் அதிகரித்துள்ளன.

இப்படிப்பட்ட சம்பவங்கள் பஸ்களில் இடம்பெறுவதால் அதில் பயணம் செய்வோர் மிக விழிப்பாக இருக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (224)

## சங்கக் கிளை இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அரியாலைப் பகுதியில் உள்ள 19ஆம் இலக்கக் கிளை திருமகள் வீதிக்கு இடமாற்றப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

இந்தக் கிளை நிலையம் முன்னர் ஆசீர்வாதப்பர் வீதியில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. (04-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் பொருள்களின் உற்பத்திகளில் அக்கறை காட்டினால் சந்தைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

## சுவிஸ் அபிவிருத்தி முகவர் அமைப்பின் தலைவர் ஹன்ஸ்பீற்றர் கருத்து

நல்லூர் ஏப்.27

குடாநாட்டு மக்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு பணம் பொருள்களைத் தயாரிப்பதில் அக்கறை காட்டினால் அதனைச் சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள முயற்சி செய்யக்கூடியதாக இருக்கும் என சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பின் தலைவர் ஹன்ஸ் பீற்றர் ஏற்றர் தெரிவித்தார்.

யாழ்.கொட்டடி சனசமூக நிலையத்தில் பனை அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்ட பணம் பொருள்கள் கைப் பணிக் கண்காட்சி சனசமூக நிலையத் தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய போது ஹன்ஸ் பீற்றர் ஏற்றர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நான் 33 வருடங்களாக இலங்கையை நன்கு பார்த்து அறிந்து வைத்திருக்கிறேன்.

இந்தப்பகுதியில் பனைவளங்கள் நல்ல முறையில் இருப்பதை அறிவேன். எமது நிலையத்தின் ஊடாகப் பணம் பொருள் அபிவிருத்திக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இது முதற்கட்ட நடவடிக்கை. அடுத்து தும்புத் தொழில் பயிற்சியும் நடத்தப்பட உள்ளது. நீங்கள் பெற்ற பயிற்சி உங்களுக்குள் உள்ள திறமைகளை வெளிக் கொண்டு வர உந்து சக்தியாக இருந்துள்ளதை உங்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களைக் காணும்போது உணரக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு பொருள்களையும் மிகவும் சிறப்பாகவும் நுணுக்கமாகவும் தயாரித்துள்ளீர்கள். இவற்றைப் பார்க்கும் போது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருப்பதுடன் தொடர்ந்து இந்த உற்பத்திகளில் நீங்கள் ஈடுபட்டு நல்ல வருமானத்தைப் பெறுவதற்கான ஒன்றாக நீங்கள் பெற்ற பயிற்சி உதவும் என்ற நம்பிக்கையும் ஏற்படுகின்றது. உங்களது கோரிக்கைகள் குறித்து நான் உதவமுடியுமா என்பதை ஆலோசிப்பேன். சிறந்த நட்சத்திரக் ஹோட்டல்களில் இந்தப் பொருள்களை வைப்பதன் மூலம் அதன் விற்பனையை அதிகரிக்கவும் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தவும் முயற்சி செய்வோம். உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெற்றால்தான் இது காத்திரமாகும் - என்றார். (9 - 111)

# தீவகத்தில் பகல் நேர மின்வெட்டால் அலுவலகப்பணிகள் பாதிப்பு

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேசங்களில் மின் விநியோகம் பகல் வேளையில் நீண்ட நேரம் தடைப்படுவதால், அலுவலக வேலைகள் பாதிக்கப்படுவதாக அதிகாரிகளும் பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

அலுவலகங்களில் கணனிகளின் செயற்பாட்டுக்கும், போட்டோப்பிரதி, தொலைநகல் மற்றும் பல்வேறு தேவை களுக்கும் மின்சாரம் பாவிக்கப்படுவதால் பகல் நேர மின்வெட்டால் அலுவலக செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

வேலணை, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் உள்ள பிரதேச செயலர் அலுவலகங்கள், வலயக்கல்வி அலுவலகங்கள்கள், வைத்தியசாலைகள் போன்றனவே இவ்வாறு மின்வெட்டால் பல்வேறு இடர்பாடுகளையும் எதிர்கொள்வதாகக் கூறப்படுகின்றது. இதனை மின்சாரசபையின் உரிய அதிகாரி கள் கவனத்தில் எடுத்து பகல் நேர மின் துண்டிப்பதை நிறுத்த அல்லது சீர்ப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என திணைக்களத்தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (04-267)

# பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட மயானங்களை புனரமைக்க நடவடிக்கை

வடமராட்சி,ஏப்.27

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சுமார் 23க்கு மேற்பட்ட மயானங்களைப் புனரமைப்புச் செய்து பராமரிப்பதற்கென, அவ்வப் பகுதிகளைச் சேர்ந்தோரை உள்ளடக்கிய பரிபாலன பராமரிப்புக் குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை பிரதேச சபை மேற்கொண்டுள்ளதாக சபையின் செயலாளர் ச.சத்திரயோகன் தெரிவித்தார்.

முதலில் புலோலியில் உள்ள கருகம்பன் மயானத்திற்கு பரிபாலன பராமரிப்புக்குழுவை நியமிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் நாளை- செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு மந்திகையிலுள்ள பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்தில் செயலாளர் ச. சந்திரயோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்துக்கு இம் மயானத்தைப் பயன்படுத்தும் மந்திகை, புலோலி வடமேற்கு,புலோலி தென்மேற்கு, துன்னாலை வடக்கு, அத்தாய், அல்வாய் கிழக்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த கிராம சேவையாளர்கள், பொது சுகாதாரப் பரி சோதகர்கள், சனசமுகநிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமய,சமூகப்பெரியார்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இம் மயாணப் பராமரிப்பில் அக்கறையுள்ள நலன் விரும்பிகள் அனைவரும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.( 9- 236)

# இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளையும் கணனி வலைப்பின்னலில் இணைகிறது

அச்சுவேலி ஏப்.27

நாடளாவிய ரீதியில் இலங்கைவங்கியின் கணனி வலைப்பின்னல் மற்றும் தன்னியக்க பணப்பரிமாற்றல் சேவையில் இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளையும் அடுத்த மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் இணைத்துக்கொள்ளப்படவுள்ளது.

இலங்கைவங்கியின் 308வது கிளையாக அச்சுவேலி இலங்கைவங்கி கணனி வலைப்பின்னலில் இணைந்து கொள்கின்றது:

தன்னியக்க பணப்பரிமாற்றல் சேவை மூலம் 24 மணிநேரமும் வாடிக்கையாளர் வங்கியின் சேவையைப் பெற்றுக்கொள்ள வசதி ஏற்பட்டுள்ளது. கணனி வலைப் பின்னலில் இணைவதன் மூலம் சர்வதேச ரீதியிலும்- நாடளாவிய ரீதியிலும் வங்கியின் சேவையை உடனுக்குடன் பெறக் கூடிய வசதி வாய்ப்புக்கள் ஏற்படும். ( 1-11)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.27

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் தேர்த் திருவிழாவும், மறுநாள் முற்பகல் 10.30 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (9-112)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.27

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (9)

* * *

வடமராட்சி,ஏப்.27

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழா வும் இடம்பெறும். (50-236)

* * *

சுழிபுரம்,ஏப்.27

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய மணவாளக்கோல விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக பூசை வழிபாடுகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா வருதல் நடைபெறும். (9-28)


* * *


யாழ்ப்பாணம்,ஏப்.27

கெருடாவில் தெற்கு கோட்டைச்சீமா முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 9ஆம் திகதி சனிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (204-253)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்





தந்தை செல்வாவின் 32 ஆவது சிரார்த்த தின அஞ்சலி நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு வண.எம்.வி. ரவிச்சந்திரன் அடிகளார் மலர்மாலை அணிவிப்பதை முதலாவது படத்திலும், செல்வாவின் சமாதியில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் உட்பட பொதுமக்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்துவதை இரண்டாவது படத்திலும் தந்தை செல்வா அறங்காவல் சபைத் தலைவர் இறைப் பேரயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், மௌலவி முகம்மட் பகீர், பெ.கனகசபாபதி ஆகியோர் உரையாற்று வதை மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது படத்திலும் காணலாம்.

நிகழ்வில் கலந்து கொண்டவர்களை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## தனியார் பஸ் சாரதிகள், நடத்துனர்களுக்கு கைவிசேஷம்

வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்க மினிபஸ் வண்டிகளில் பணியாற்றும் சாரதிகள், நடத்துனர்களுக்கு புத்தாண்டை ஒட்டி முதன்முதலாக இம்முறை கைவிசேஷம் வழங்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் இ.நவம், பருத்தித்துறையில் அமைந்துள்ள சங்கப் பணிமனையில் வைத்து சுமார் 160 சாரதிகள், நடத்துனர்களுக்கு கைவிசேடப் பணத்தை வழங்கினார். (50-236)

## 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

தோற்றம் 05 . 10 . 1946



மறைவு 28 . 03 . 2009

### அமரர் சந்திரசேகரம் குமரகுரு

**அன்பின் உறைவிடமாய் பாரினிலே வாழ்ந்து**
**அன்பால் எமை அரவணைத்த குமரகுரு**
**சர்வதாரி ஆண்டு பங்குனித் திங்கள் அன்று**
**பரன் அடி சேர்ந்தார் நித்திய வாழ்வு பெறவே!**

எங்கள் குடும்பத்தலைவர் குமரகுரு நோயுற்று இருந்த போதும் பின்னரும் ஜெபத்தினாலும், ஆறுதலாலும் அரவணைத்த A.O.G. சபைப் போதகர்களுக்கும் விசுவாசிகளுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிப்பது டன், எங்கள் குடும்பத் தலைவர் குமரகுரு நோயுற்று இருந்தபோது, அவருக்கு சிகிச்சையும் ஆறுதலும் அளித்த ஆனைப்பந்தி சுகந்தா வைத்தியசாலை நிர்வாகி, வைத்தியர்கள், ஊழியர்கள் யாவருக்கும் ஆனைப்பந்தி மெ.மி.பாடசாலை சமூகத்திற்கும் மற்றும் இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் எமக்கு எல்லா வழிகளிலும் தோள்கொடுத்து உதவிய சகல நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் இறுதி ஊர்வலதில் கலந்துகொண்ட அனைவருக்கும் எங்கள் உள்ளங் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

*288 (240), நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.* (84488)

மனைவி சூரியாவும்
அன்னாரின் சகோதரர்களும்.

## புளியங்கூடலில் 'கோப் சிற்றி'

யாழ்ப்பாணம், ஏப்.27

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மினி கோப்சிற்றி ஒன்றை இன்று திங்கட்கிழமை புளியங்கூடல் பகுதியில் திறந்து வைக்கவுள்ளது.

சங்கத்தின் தலைவர் எஸ்.சுந்தரலிங்கம் தலைமையில் திறப்பு விழா நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (7-224)

## பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையிலுள்ள அலுவலருக்கு வினைத்திறமைக்கான தடைப் பரீட்சைக்கான விசேட வகுப்புகள்

அரச சேவையில் நீண்டகால அனுபவம் வாய்ந்தவரும், தற்போது அதி சிறப்புத் தரத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமை புரிபவரால், மத்திய மாகாண திணைக்களங்களில் இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் அலுவலர்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்கு விதிகள் கற்பிக்கப்படும். இவ்வகுப்புகள் சித்தன்கேணி, மானிப்பாய், உடுவில், யாழ்ப்பாண நகரப் பகுதி ஆகிய இடங்களில் பொதுவான இடமொன்றைத் தெரிவு செய்து யாதேனும் ஓர் அலுவரால் கீழ்வரும் தொலைபேசியில் பிற்பகல் 6 மணிக்குப் பின் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

தொ.பே.: 0602216620

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி
**ஞானாம்பிகை தேவபாலன்**
அவர்களின் மாமா

### வேலுப்பிள்ளை நடராஜா

அவர்களின் மறைவினால்
துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன், ஆத்ம சாந்திக்கும்
பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

யா/சக்தி அம்மன் வித்தியாலயம்,
சாவகச்சேரி. (சி/558209)

## குழாய்க் கிணறு அமைப்பு

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் சிறுவர் பூங்கா மற்றும் துரையப்பா விளையாட்டு அரங்கு ஆகியவற்றுக்கான தண்ணீர் தேவைகளைப் பூர்த்தியாக்கக் கூடியதான வகையில்அண்மையில் குழாய்க் கிணறுகளை யாழ். மாநகரசபை அமைத்துள்ளது. (04-111)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1082 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம் 06 40 51 55

24-04-2009

**ஜக்பொட் பரிசு ரூபா. 2,859,850/- வெல்லப்படவில்லை**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 204,043 | 20/- | 4,080,860/- |
| 2 இலக்கங்கள் | 18,675 | 40/- | 747,000/- |
| 1 இல. + லக்கினம் | 18,425 | 60/- | 1,105,500/- |
| 2 இல. + லக்கினம் | 1,734 | 200/- | 346,800/- |
| 3 இலக்கங்கள் | 491 | 1000/- | 491,000/- |
| 3 இல. + லக்கினம் | 55 | 10,000/- | 550,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 200,000/- | 800,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,859,850/- | - |
| மொத்தம் | | | 8,121,160/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 243,432 | | 8,621,160/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,770,950/-

2009 ஏப்ரல் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 500101764-7-30 |
| கேகாலை | 500109151-6-31 |
| மொனராகலை | 500100027-2-43 |
| கம்பஹா | 500108311-3-04 |
| ஹம்பாந்தோட்டை | 500099967-8-12 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் கனகசபாபதி
சிறிகந்தநாயகம்
(சிறி)
(முகாமையாளர், மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழக
நீடித்த கருமபீடம்)

மலர்வு 03.05.1955 உதிர்வு 08.05.2008

திதி: அட்சய திருதியை

அன்பின் சிகரமே!
பாசத்தின் உறைவிடமே!
நீங்காத உங்கள் நினைவலைகள்
நிழலாகத் தொடருதையா!
தான் உருகி மெழுகுவர்த்தி
ஒளி கொடுக்கும்
நீர் உருகி ஒளி கொடுத்தீர்
எம் வாழ்வு சிறந்திடவே!
கடமையில் கண்ணெனவே ஒளிந்தீரே!
ஆயிரம் உறவு இருந்தென்ன
அப்பா என்று
சொல்ல நீங்களில்லையே!
நீங்கள் துயில் கொண்டு
ஒரு வருடம் சென்றுவிட்டது
என்றும் எங்கள் இதயத்தின்
உள்ளக் கோயிலில்
நீங்கள் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள்.

**குடும்பத்தினர்.**

இந்துக்கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (84667)

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை நல்லையா

மாமுனை, செம்பியன்பற்றினைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை நல்லையா 24.04.2009 வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் தவராணி, சத்தியபவானி (சுவிஸ்), சத்தியவதனி (லண்டன்), சத்தியபவான் (லண்டன்), சத்தியவண்ணன் (லண்டன்), சத்தியபாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவனேசன், சிவகுமார் (சுவிஸ்), ஜெயதாசன் (லண்டன்), காயத்திரி (லண்டன்), தமிழ்ச்செல்வி (லண்டன்), ஜோர்ச் ஆகியோரின் அன்பு மாமனும் யுவர்சன், சாருஷன், சுபாஸ்கரி (சுவிஸ்), சுபாஸ்மேனன் (சுவிஸ்), நிலவன் (லண்டன்), குணாளன் (லண்டன்), கரிகாலன் (லண்டன்), ஜோஜிதன், சாஜிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் பொன்னம்மா, முருகேசு (அமெரிக்கா), குணநாயகமலர், மனோன்மணி, மகாலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் உடன்பிறப்புமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 25.04.2009 நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி ஜோர்ஜ் பாமினி (மகள்).

வவுனியா. (84724)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி முகத் திடலிலானாலும் சரி, விவாதத்தில் கலந்துகொள்ளத் தயார்

கொழும்பு, ஏப்.27

இது வாத; விவாதங்களில் ஈடுபடுவதற்கான நேரமல்ல. தமிழ் மக்களை விடுதலைப் புலிகளது பிடியிலிருந்து விடுவிக்கும் நடவடிக்கைகள் முடிவடைந்ததும், காலி முகத் திடலிலாயினும்சரி, பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்க விவாதத்தில் கலந்துகொள்ளத் தாம் தயாராயிருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து தம்முடன் பகிரங்க விவாதமொன்றில் கலந்து கொள்ள ஜனாதிபதி தயாராய் உள்ளாரா? என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் சவால் விடுத்திருந்தமை தெரிந்ததே. அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

தற்போது வாத விவாதங்களில் கலந்து கொள்ளத் தமக்கு நேரம் கிடையாதெனவும், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாகவும், பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து விடுபட்டு வெளியேறி அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும் அப்பாவித் தமிழ் மக்களுக்கு உதவுவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தமது நேரத்தைச் செலவிட நேர்ந்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உலக வரலாற்றிலேயே இதுவரை ஒரு போதும் மேற்கொள்ளப்படாத வகையிலான பணயக் கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கைகளை அண்மையில் அரசு மேற்கொண்டு முடித்துள்ளது. இந்த வேளையில் வாத விவாதங்களில் ஈடுபடுவதைவிட நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வருதலே நியாயமானதாகும். தம்மை பகிரங்க விவாதத்தில் கலந்து கொள்ளுமாறு சவால் விடுக்கும் தரப்பினர் ஐந்து நட்சத்திர விடுதிகளில் இருந்து கொண்டு விமர்சனங்களை மேற்கொண்டு வருவதாகக் குற்றம் சாட்டிய ஜனாதிபதி உண்மையில் விவாதத்தில் கலந்துகொள்ளுமாறு இதுவரையில் எத்தரப்பினராலும் தமக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் விடுக்கப்படவில்லையெனவும் தெரிவித்தார்.

அண்மையில் அலரிமாளிகையில் இடம்பெற்ற மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்ட விதத்தில் கருத்து வெளியிட்டிருந்தார்.




சுன்னாகம் றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் சுன்னாகம் முத்தமிழ் மன்றத்தில் கிறிஸ்மஸ் புத்தாண்டு நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கழக உறுப்பினர்களையும், கிறிஸ்மஸ் தாத்தாவுடன் உறுப்பினர்கள் உரையாடி மகிழ்வதையும் படத்தில் காணலாம். *(படம்: நேசன்)*

# தென்மராட்சிப் பிரதேச செயலக கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.27

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டி - 2009 முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:

**கட்டுரை -கனிஸ்ட பிரிவு**

1ஆம் இடம் - சின்னத்தம்பி இலக்கியா - மீசாலை வீரசிங்கம் ம.வி, 2ஆம் இடம் - புண்ணியமூர்த்தி நிடோஜினி - மீசாலை வீரசிங்கம் ம.வி, 3ஆம் இடம் - ஸ்ரீதரன் ரம்யா - சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

**சிரேஸ்ட பிரிவு**

1ஆம் இடம் - க.மனோஜா - மீசாலை வீரசிங்கம்ம.வி, 2ஆம் இடம் - யோகேஸ்வரன் கஜேந்தினி - மீசாலை வீரசிங்கம் ம.வி, 3ஆம் இடம் - ந.கோபிகா - சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

**கவிதை- கனிஸ்ட பிரிவு**

1ஆம் இடம்- நாகராசா ஜனனி - மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி, 2ஆம் இடம் - கனகசிங்கம் ஜெசிந்தா - கச்சாய் அ.த.க.பாடசாலை, 3ஆம் இடம் - தர்மலிங்கம் கிர்சிகா ஸ்ரீபழனி ஆண்டவர் அறநெறிப் பாடசாலை.

**சிரேஸ்ட பிரிவு**

1ஆம் இடம்- சி.சுரேகா - மீசாலை வீரசிங்கம் ம.வி, 2ஆம் இடம் - தபேந்திரன் வைகீர்த்தா - கைதடி முத்துக்குமாரசாமி ம.வி, 3ஆம் இடம் - க.மனோசா - மீசாலை வீரசிங்கம் ம.வி.

**சிறுகதை-சிரேஸ்ட பிரிவு**

1ஆம் இடம் - க.மனோகா - மீசாலை வீரசிங்கம் ம.வி, 2ஆம் இடம் - செல்வராசா லாகினி - மீசாலை வீரசிங்கம் ம.வி.

**கவிதை (ஆங்கிலம்)-கனிஸ்ட பிரிவு**

1ஆம் இடம் - முத்துலிங்கம் அபிராமி - சாவகச்சேரி ஸ்ரீபழனி ஆண்டவர் அறநெறிப் பாடசாலை, 2ஆம் இடம் - உதயகுமார் தேனுகானி - சாவகச்சேரி ஸ்ரீபழனி ஆண்டவர் அறநெறிப் பாடசாலை, 3ஆம் இடம் - மோகனதாசன் நேருஜா - சாவகச்சேரி ஸ்ரீபழனி ஆண்டவர் அறநெறிப் பாடசாலை.

**திறந்த போட்டிகள்-சிறுகதை**

1ஆம் இடம் - வைரமுத்து சின்னப்பா - சங்கத்தானை சாவகச்சேரி, 2ஆம் இடம் - கனகரத்தினம் சுவேதிகா - தாவளை இயற்றாலை, 3ஆம் இடம் - நடராசா போஜனவனிதை - கண்டி வீதி, சாவகச்சேரி.

**கவிதை**

1ஆம் இடம் - நாகராச தேவராளி - மட்டுவில் ம.வி, 2ஆம் இடம் - இராசதுரை சிவகாமசுந்தரி - மீசாலை வடக்கு, 3ஆம் இடம் - நடராசா சடாதரன் - மட்டுவில் ம.வி.

**பாடலாக்கம்**

1ஆம் இடம் - முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம் - மந்துவில் மேற்கு, 2ஆம் இடம் - வைரமுத்து சின்னப்பா - சங்கத்தானை சாவகச்சேரி, 3ஆம் இடம் - சிவகுமார் சிவாஜினி - கல்வயல் 1ஆம் கட்டை.

**கவிதை (ஆங்கிலம்)**

1ஆம் இடம் - வைரமுத்து சின்னப்பா - சங்கத்தானை சாவகச்சேரி, 2ஆம் இடம் - சண்முகநாதன் உருத்திராதேவி - டச்சு வீதி சாவகச்சேரி, 3ஆம் இடம் - ம.தே. நிறோஜன் - மட்டுவில் தெற்கு.

**பாடலாக்கம் (ஆங்கிலம்)**

1ஆம் இடம் - எம்.பி.சண்முகநாதன் - டச்சு வீதி சாவகச்சேரி, 2ஆம் இடம் - திருமதி உ.சண்முகநாதன் - டச்சு வீதி சாவகச்சேரி, 3ஆம் இடம் - வைரமுத்து சின்னப்பா - சங்கத்தானை.

(04- 207)

# தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சிநெறி நாளை

யாழ்ப்பாணம்,ஏப்.27

நல்லூர் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையம் விதாதா செயற்திட்டத்தின் கீழ்,காகிதக்கூழ் மூலம் சிலைகள் வடிவமைத்த [illegible] ர்பான தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயி[illegible]நெறி நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறவுள்ளது இதில் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் எஸ். ரவீந்திரசர்மா பிரதம விருந்தினராகவும்,நிர்வாக உத்தியோகத்தர் திருமதி க. நாகராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (- 9)

# ராசி பலன்

27-04-2009 முதல்
03-05-2009 வரை

பொ.சந்திரலிங்கம்

### மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியத் தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம். மன அமைதி இருக்காது.

### இடபம்



கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

### மிதுனம்



மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

### கடகம்



புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

### சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறாது. மன அமைதி இருக்காது.

### கன்னி



உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

### துலாம்



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்காது.

### விருச்சிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

### தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

### மகரம்



உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

### கும்பம்



அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியத் தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்காது.

### மீனம்



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நல மில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவமடையும் இளம் பராயத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்



**கேள்வி:** எனது மகள். வயது 13. பத்து வயதில் பருவமடைந்தாள். பருவம் அடைந்த காலப்பகுதியில் பலநாட்களுக்கு அதிகளவு இரத்தப்பெருக்கு ஏற்ட்டது. அப்பொழுது ஒரு வைத்தியரிடம் காண்பித்தபோது, அவர் ஹோர்மோன் மாத்திரைகளை கிரமமாக ஒவ்வொரு மாதமும் எடுக்கும்படி தந்தார். இரண்டு மாதம் பிரச்சினை எதுவுமில்லை. மாத்திரைகளை எடுத்த பின்னர் அதிகளவு இரத்தப்பெருக்கு ஏற்பட்டது. ஹோர்மோன் மாத்திரைகள் இதற்கு கூடாது என்று சிலர் கூறவே நான் இன்னொரு வைத்தியரிடம் மகளைக் கொண்டு சென்றேன். அவர் இரும்புச்சத்து மாத்திரைகளை உபயோகிக்க அறிவுறுத்தினார். அதன் பலனாக 40 நாட்களுக்கு ஒரு தடவை மாதவிலக்கு வந்தது. இப்பொழுது 55 நாட்களாகியும் மாதவிலக்கு வரவில்லை. ஆனால், நிறையும் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆலோசனை தரவும்.

**பதில்:** சிறுமிகளில் 10 - 15 வீதமானோருக்கு முதலாவது மாதவிலக்கின் பின்னர் மாதவிலக்கு கிரமமாக ஏற்படுவதில்லை. இதற்குக் காரணம் சூலகத்தில் கிரமமாக முட்டை உற்பத்தி இடம்பெறாததே. சிறிது காலத்தின் பின்னர் இது சரியாகி விடும். மாதவிலக்கு வராது இருந்தால் அல்லது சிறிதளவே தென்பட்டால், இது தவிர வேறு பிரச்சினைகள் இல்லாவிடில் கவலை வேண்டாம். இதற்கு எதுவித மருந்து சிகிச்சையும் தேவையில்லை. ஆனால், இந்த விஷயத்துடன் நான் வேறு பிரச்சினைகள் என்று குறிப்பிடும் நிறை அதிகரிப்பு, உடலில் அதிகப்படியான உரோமவளர்ச்சி அல்லது அடிக்கடி அதிக இரத்தப்பெருக்கு ஏற்படின் ஒரு Scan பரிசோதனை அவசியம். அத்துடன் Hb எனப்படும் இரத்த சத்துபரிசோதனை, Platele Count எனப்படும் குருதி உறைய அவசியமான கலங்களின் எண்ணிக்கை பரிசோதனை என்பவையும் அவசியம். Gynaecologist என்கின்ற பெண்நோய் நிபுணரின் ஆலோசனையும் தாயாகிய உங்களுக்கு மனநிம்மதியைத்தரும்.

***

**கேள்வி:** எனது தாயார் வயது 74. மிகவும் மெலிந்த தோற்றம். அவரது நிறை 35 கி.கிறாம். உயரம் 150 செ.மீற்றர். அடிக்கடி தடிமல், இருமல் ஏற்படுகிறது. சமீபத்தில் இரத்தப்பரிசோதனை செய்தபோது அவரது இரத்த சத்து ஹீமகுளோபின் (Hemaglobin) 7.2 gm/di இருந்தது. கடந்த இருவருடங்களாக இந்த இரத்த சத்து குறைவாகத்தான் இருக்கின்றது. அவருக்கு நெஞ்செரிவு, சமியாக்குணம் இருக்கிறது. இளவயதில் வயிற்றுப் புண் - (Ulcer) ஏற்பட்டு சத்திர சிகிச்சை நடந்தது. பரிகாரம் கூறவும்.

**பதில்:** உங்கள் தரவுகளை வைத்து நோக்கும்போது - அவரது உயரத்திற்கு ஏற்ற நிறை இல்லாமல் இருப்பது தெரிகிறது. அவரது உயரத்திற்கு - அவருக்கு குறைந்தது 50 கிலோகிராம் நிறை இருக்க வேண்டும். இதற்கு அவர் போதிய உணவு உட்கொள்ளாதிருப்பதே காரணமாக இருக்கலாம். இதற்கு அவருக்கு உள்ள இரப்பை சம்பந்தமான கோளாறு காரணம். அவரது இரத்த சத்து மிக குறைவு. அவர் Anaemia என்ற இரத்தச் சோகையினால் பாதிக்கப்பட்டுள்ளார். இந்த இரத்த குறைவு ஏற்பட்டதற்குரிய காரணம் கண்டறியப்பட வேண்டும். ஏதாவது, காரணத்தால் இந்த கசிவு ஏற்படுவது, அல்லது இரத்தத்தை உற்பத்தியாக்கும் எலும்பு மச்சை (Bone Marrow) கோளாறு என்பவை இதற்கு காரணங்களாக இருக்கலாம். மூலநோய், இரப்பைப் புண். (Gastric ulcer) என்பவற்றால் இரத்தக் கசிவுகள் ஏற்படலாம். புற்றுநோய், இரத்த உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்கள் அவரது உணவுகளில் இல்லாமை ஆகியவை எலும்பு மச்சைகளில் போதிய இரத்த உற்பத்தி குறைவுக்கு காரணங்களாக அமைகின்றன.

முதலில் அவரது இரத்தத்தில் உள்ள Reticulocyte எண்ணிக்கையை பரிசோதனை செய்வது அவசியமாகிறது. தேவைப்படின் எலும்பு மச்சை - (Bone Marrow) பரிசோதனை கூட செய்யப்பட வேண்டும். எனவே, நீங்கள் Clinical Haematologist என்கின்ற விசேட மருத்துவ நிபுணரின் ஆலோசனை பெறுவது அவசியம்.

***


**கேள்வி:** வயது 23. ஆண். கடந்த ஒரு வருடமாக எனது மூலத்திற்கு அருகில் மல வாசலில் ஒரு கட்டி இருப்பதாக மலம் கழிக்கும் போது புரிகிறது. ஆனால் இந்தக் கட்டியால் வலி எதுவும் இல்லை. மூலத்தால் இரத்தம் போவதும் இல்லை. எனக்கு ஏற்பட்டிருப்பது மூல வியாதியா? எனக்கு கொஞ்சம் கால்களில் நரம்பு சிலந்தி எனப்படும் varicose veins உள்ளது. இந்த இரண்டுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா. மூலவியாதி வராமல் இருக்க என்ன செய்ய வேண்டும்.

**பதில்:** மூல வியாதி என்பது மலவாசலில் உள்ள இரத்த நாளங்களின் புடைப்பு ஆகும். கடினமாக மலம் போகும் போது மலத்தை நாம் முக்கி (strain) போகப் பண்ணுவதால் இரத்த நாளங்கள் புடைத்து வெளியே தள்ளப்படுகின்றது. நீண்ட நேரம் மலசலக்கூடத்தில் - புத்தகம் வாசித்தோ, வானொலி கேட்டுக்கொண்டோ மலம் கழிக்கும் பழக்கம் இந்த மூலவியாதிக்கு ஒரு காரணம் என்கிறார்கள். நிறைய காய்கறி வகைகள், பழவகைகளை உணவு விஷயத்தில் சேர்ப்பவர்களுக்கு மலம் இலகுவாகக் கழியும். உணவில் நிறைய காரம், எண்ணெய்த் தன்மைகளை சேர்ப்பவர்களுக்கு மலவாசலில் அரிப்பு, எரிவு ஏற்படுவதால் - மலம் கழிக்கும் போது முக்கிக் கொண்டிருக்க வேண்டும் போல் தோன்றும். மேலும் மதுபானம் அருந்துபவர்களுக்கு ஈரல் அழற்சி பெற்று வீக்கம் அடையும் போது - மூலத்திலுள்ள நாளங்கள் - அவை ஈரல் நாளங்களோடு தொடர்பாக இருப்பதால் - வீங்கி மூலவியாதி ஏற்படக் காரணமாக அமையும். மூலவியாதி ஆரம்பத்தில் சாதாரணமாக வீங்கி உங்களுக்கு இருப்பது போல் மலம் கழிக்கும் போது வெளியில் தள்ளப்படும். காலம் செல்லச் செல்ல, மலம் கழிக்கும் போது வெளியில் தள்ளப்பட்ட வீக்கம், மலம் கழித்தபின்னர் தானாகவே உள்ளே செல்லாது. விரல்களைக் கொண்டு உள்ளே தள்ளவேண்டிய நிலை ஏற்படும். இதனை மூலவியாதியின் இரண்டாவது கட்டம் (Haemorhoids Second Stage) என்பார்கள். இதனையும் கவனிக்காவிட்டால் - உணவு, மலம் கழிக்கும் பழக்கங்களில் மாற்றம் ஏற்படுத்தாது விட்டால் - வெளியே தள்ளப்பட்ட நாளக்கட்டிகள், விரல்களால் உள்ளே தள்ளினாலும், போகாது. வெளியே அழுத்திக் கொண்டிருந்து, வீக்கம், இரத்தஉறைவு, அழற்சி, தொற்று ஏற்பட்டு வலி, இரத்தப்பெருக்கு என்பவை ஏற்படும். இந்த மூன்றாவது கட்டத்து மூலவியாதியை சத்திரசிகிச்சையால் தான் குணமாக்கலாம். முதல் இரண்டு கட்டங்களுக்கும் நாளங்களை இறுக்கும் ஊசிமருந்துகளை, நாளத்தில் ஏற்றுவதன் மூலமும், Banding என்கின்ற நாளங்களை இறுக்கி கட்டும் சிகிச்சை மூலமும் குணம் காணலாம். ஒரு சிலருக்கு முதல் கட்டத்தில் - நாளங்கள் சிதைந்து மலம் கழிக்கும் போது, வலி இன்றி இரத்தப்பெருக்கு ஏற்படும். இந்த நிலையிலும் முதல்கட்ட சிகிச்சை பலன் அளிக்கும். மூலத்தில் ஏற்படும் கட்டிகள் எல்லாம், மூல வியாதி காரணமாக மட்டுமே ஏற்படுவதில்லை. பெருங்குடல், மலக்குடல் புற்றுநோய்களும் மூலவியாதிக்கு காரணமாக இருக்கின்றபடியால் ஒரு விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனை பெறுவது மிக அவசியம். மேலும் - Varicose Veins என்கின்ற நரம்பு சிலந்தி நோய், நாளங்களில் இரத்த ஓட்டத்துக்கு உதவும் வால்வுகளின் (Valves) செயற்பாட்டின் குறைவினால் ஏற்படுகின்றது. இதற்கும் மூலவியாதிக்கும் தொடர்பு ஏதும் இல்லை.

***

**கேள்வி:** பெண் வயது 28. திருமணமாகி 8 மாத கர்ப்பமாக உள்ளேன். இது எனது முதலாவது குழந்தை. எனக்கு பிரசவவேதனையை நினைத்தால் பயமாக இருக்கின்றது. எனது மருத்துவர் எனக்கு சுகப்பிரசவம் ஆகும் என்று உறுதி கூறுகின்றார். ஆனால் எனக்கு பிரசவத்தை நினைக்கவே நடுங்குகின்றது. எனது மருத்துவரிடம் சத்திர சிகிச்சைமூலம் குழந்தையை பிறப்பிக்க கேட்கலாமா? உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** சரியான மருத்துவக்காரண மில்லாமல் சத்திர சிகிச்சை மூலம்- சிசேரியன் (Caesarian) குழந்தை பெறுவிக்க எந்த மருத்துவரும் முன்வரமாட்டார். கர்ப்பமாயிருக்கும் போது தாய்க்கு இரத்த அழுத்தம் அதிகரித்தல், நீரிழிவு நோய் ஏற்படல், பிரசவத்தின் போது குழந்தை இலகுவாக வெளியே வர இடுப்பு எலும்பு கள் விரிந்து இடம் கொடுக்காமல் இருத்தல், அல்லது - பிரசவத்தின் போது - பிரசவமாவது தாமதம் அடைதல், இதனால் குழந்தைக்கு மரண ஆபத்து ஏற்படல் போன்ற முக்கிய காரணங்கள்



ஏதாவது இருந்தாலொழிய - சத்திர சிகிச்சை செய்து குழந்தையை பிரசவிக்க மருத்துவர் விரும்பமாட்டார். மருத்துவத்தொழிலின் ஒழுக்க கோவை (Code of Ethics) இதனை அவசியம், காரணம் இன்றி - ஒரு நோயாளிக்கு சிகிச்சை அளிக்கப்படலாகாது என்ற [illegible] - இப்படியான செயலை அனுமதிப்பதில்லை. பிரித்தானியா போன்ற சில மேல் நாடுகளில் தனக்கு சிசேரியன் சிகிச்சை அளிக்க மருத்துவரை கேட்பதற்கு கர்ப்பிணிகளுக்கு சட்டப்படி உரிமை இல்லை. எனவே சாதாரண பிரசவம் பற்றிய பயம் தான் உங்களை இப்படி எண்ணவைத்துள்ளது. நீங்கள் உங்கள் மருத்துவருடன் இது பற்றி மனம் விட்டு கலந்தாலோசியுங்கள். உங்கள் பயத்தின் காரணங்களை அவர் புரிந்து, அறிவுரைகளை வழங்கி உங்கள் பயத்தை போக்குவார். 'பிரசவம் என்பது பெண்ணுக்கு இன்னொரு பிறப்பு' 'பிரசவம் ஒரு பெண்ணுக்கு மறு பிறப்பு' என்றெல்லாம் தாய்மையை மேம்படுத்து வதற்கு - பெரியவர்கள் சொன்ன கருத்துக் களை, பிழையாக அர்த்தம் கொண்டு - உங்களைப் போன்ற பெண்கள் பிரசவத்தை மரணத்திற்கு இணையாக்கி விடுகின்றார் கள். இது தவறு. பிரசவத்துக்கு இணையான தொன்று இவ்வுலகில் இல்லை. புதிய உயிரை உலகிற்கு கொண்டுவரும் ஒரு தாயானவளின் மகத்தான சாதனை அது. எந்தவொரு செயலிலும் சில கஷ்டங்கள் துன்பங்கள் இருப்பது போல் - பிரசவத்திலும் வலியுண்டு. இதற்குப் பயந்து பிரசவவலியை மறக்க- சத்திர சிகிச்சை செய்வது கொதிக்கும் எண்ணெய்க்கு பயந்து நெருப்பில் விழுவதற்கு சமானமாகும். சிசேரியன் சத்திரசிகிச்சை என்னவோ இலகுவானது என்ற எண்ணாதீர்கள். தாய்க்கும் , சிசுவுக்கும் சத்திரசிகிச்சையின் போது பாரிய பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு என்பதையும் நினைவில் கொண்டிருங்கள். சாதாரணமாக பிரசவ வலிகண்டு குழந்தைகள் பெறுவோர் தாய்மையின் மகத்துவத்தை அறிந்தவர் கள். குழந்தை மேல் அவர்களது அன்பு, பாசம், பரிவு அளவுக்கதிகமாக இருக்கும். பத்து மாதம் சுமந்து, வேதனை அடைந்து பெற்ற குழந்தை என்று அன்பைச் சொரிவார்கள். அது போல குழந்தையும் இணையாக தாயிடம் அன்பு காட்டும். இது குழந்தைகள் வளர்ச்சிக்கு உறுதுணை என்று குழந்தை மனோவியல் ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் விஞ்ஞானத்துறை எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
381, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சத்திரசிகிச்சை மூலம் பெற்றெடுத்த குழந்தைகள் - தாயிடம் அதிகளவு பற்றில்லாமல் வளர்கின்றார்கள் என்று ஒரு சில மனோவியல் நிபுணர்கள் கருத்துரைத்துள்ளார்கள். இந்த கருத்து விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப் படாவிடிலும், சமூகவியலாளர் - சிசேரியன் குழந்தை களின் வளர்ச்சியை, மற்றக்குழந்தைகளின் வளர்ச்சியுடன்- வளர் இளம் பருவம்வரை ஒப்பிட்டு - சாதாரணமாக பிரசவமான குழந்தைகளின் மனவளர்ச்சி, மனப்பக்குவம் கொஞ்சம் உயர்ந்து நிற்பதாகக் கூறுகின்றார்கள். எனவே உங்கள் மருத்துவருடன் கலந்து ஆலோசித்து, பயத்தை நீக்குங்கள்.

***

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். வலய மெய்வன்மைப் போட்டிகள் நாளை பல்கலை மைதானத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.கல்வி வலய மெய்வன்மைப் போட்டிகள் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நாளை முதல் மூன்று தினங்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ளன. இப்போட்டிகள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெய்வன்மைப் போட்டிகள் பற்றிய யாழ்.கல்வி வலயம் வெளியிட்டுள்ள நிகழ்ச்சி அட்டவணை விவரம் வருமாறு:

முதலாம் நாள் நிகழ்ச்சி

19 வயது ஆண் 5000 மீற்றர் ஓட்டம் - இறுதி, 21 வயது ஆண் 5000 மீற்றர் ஓட்டம் - இறுதி, 19 வயது பெண் 5000 மீற்றர் ஓட்டம் - இறுதி, 21 வயது பெண் 5000 மீற்றர் ஓட்டம் - இறுதி, 17 வயது ஆண் 1500 மீற்றர் ஓட்டம் - இறுதி, 17 வயது பெண் 1500 மீற்றர் ஓட்டம் - இறுதி, 19 வயது பெண் கோலூன்றிப் பாய்தல் - இறுதி, 17 வயது ஆண் கோலூன்றிப் பாய் தல் - இறுதி, 21 வயது பெண் கோலூன்றிப் பாய்தல் - இறுதி, 21 வயது ஆண் கோலூன்றிப் பாய்தல் - இறுதி, 21 வயது ஆண் 400 மீற்றர் தடை தாண்டல் - தெரிவு; 17 வயது பெண் கோலூன்றிப் பாய்தல் - இறுதி, 21 வயது பெண் 400 மீற்றர் தடை தாண்டல் - தெரிவு, 19 வயது ஆண் 400 மீற்றர் தடைதாண்டல் - தெரிவு, 21வயது ஆண் 400 மீற்றர் தடை தாண்டல் - இறுதி, 19 வயது பெண் 400 மீற்றர் தடைதாண் டல் - தெரிவு, 21 வயது பெண் 400 மீற்றர் தடைதாண்டல் - இறுதி, 19 வயது ஆண் 400 மீற்றர் தடைதாண்டல் - இறுதி, 19 வயது பெண் 400 மீற்றர் தடை தாண்டல் - இறுதி, 17 வயது ஆண் 400 மீற்றர் தடை தாண்டல் - தெரிவு, 17 வயது பெண் 400 மீற்றர் தடைதாண்டல் - தெரிவு, 17 வயது ஆண் 400 மீற்றர் தடைதாண்டல் - இறுதி, 17 வயது பெண் 400 மீற்றர் தடை தாண்டல் - இறுதி.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி

21 வயது ஆண் 1500 மீற்றர் ஓட்டம் - இறுதி, 19 வயது ஆண் 1500 மீற்றர் ஓட்டம் - இறுதி, 21 வயது பெண் 1500 மீற்றர் ஓட்டம் - இறுதி, 19 வயது பெண் 1500 மீற்றர் ஓட்டம் - இறுதி, 17 வயது பெண் உயரம் பாய்தல் - இறுதி, 19 வயது ஆண் நீளம் பாய்தல் - இறுதி, 15 வயது பெண் குண்டு போடுதல் - இறுதி, 15 வயது ஆண் ஈட்டி எறிதல் - இறுதி, 11 வயது ஆண் நீளம் பாய்தல் - இறுதி, 19 வயது பெண் குண்டு போடுதல் - இறுதி. 21 வயது ஆண் தட்டெறிதல் - இறுதி, 11 வயது பெண் 75 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 11 வயது ஆண் 75 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 13 வயது ஆண் 100 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 15 வயது ஆண் 100 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 17 வயது ஆண் 100 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 19 வயது ஆண் 100 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 21 வயது ஆண் 100 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 13 வயது பெண் 100 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 15 வயது பெண் 100 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 17 வயது பெண் 100 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 19 வயது பெண் 100 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 21 வயது பெண் 100 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 11 வயது ஆண் 100 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 11 வயது பெண் 100 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 13 வயது பெண் நீளம் பாய்தல் - இறுதி, 13 வயது ஆண் உயரம் பாய்தல் - இறுதி, 19 வயது ஆண் குண்டு போடுதல் - இறுதி, 15 வயது ஆண் குண்டு போடுதல் - இறுதி, 17 வயது பெண் தட்டெறிதல் - இறுதி, 17 வயது ஆண் ஈட்டி எறிதல் - இறுதி, 21 வயது ஆண் நீளம் பாய்தல் - இறுதி, 21 வயது பெண் 400 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 19 வயது பெண் 400 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 17 வயது பெண் 400 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 15 வயது பெண் 400 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 15 வயது ஆண் 400 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 21 வயது ஆண் 400 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 19 வயது ஆண் 400 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 17 வயது ஆண் 400 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 11 வயது பெண் நீளம் பாய்தல் - இறுதி, 11 வயது ஆண் உயரம் பாய்தல் - இறுதி, 17 வயது ஆண் குண்டுபோடுதல் - இறுதி, 15 வயது பெண் தட்டெறிதல் - இறுதி, 13 வயது ஆண் நீளம் பாய்தல் - இறுதி, 21 வயது பெண் ஈட்டி எறிதல் - இறுதி, 17 வயது ஆண் 100 மீற்றர் ஓட்டம் - இறுதி, 17 வயது பெண் 100 மீற்றர் ஓட்டம் - இறுதி, 11 வயது ஆண் 100 மீற்றர் ஓட்டம் - இறுதி, 11 வயது பெண் 100 மீற்றர் ஓட்டம் - இறுதி, 15வயது பெண் நீளம் பாய்தல் - இறுதி, 21 வயது ஆண் ஈட்டி எறிதல் - இறுதி, 15 வயது ஆண் உயரம் பாய்தல் - இறுதி, 19 வயது ஆண் தட்டெறிதல் - இறுதி, 19 வயது பெண் தட்டெறிதல் - இறுதி, 11 வயது பெண் உயரம் பாய்தல் - இறுதி, 21 வயது பெண் நீளம் பாய்தல் - இறுதி, 13 வயது ஆண் 4x100 மீற்றர் அஞ்சல் - இறுதி, 19 வயது ஆண் 4x100 மீற்றர் அஞ்சல் - இறுதி, 17 வயது ஆண் 4x100 மீற்றர் அஞ்சல் - இறுதி, 17 வயது ஆண் நீளம் பாய்தல் - இறுதி, 21 வயது ஆண் 4x100 மீற்றர் அஞ்சல் - இறுதி, 17 வயது பெண் முப்பாய்ச்சல் - இறுதி, 13 வயது பெண் 4x100 மீற்றர் அஞ்சல் - இறுதி, 17 வயது ஆண் 400 மீற்றர் ஓட்டம் - இறுதி, 21 வயது பெண் 4x100 மீற்றர் அஞ்சல் - இறுதி, 21 வயது ஆண் 400 மீற்றர் ஓட்டம் - இறுதி, 15 வயது ஆண் 400 மீற்றர் ஓட்டம் - இறுதி, 17 வயது பெண் 400 மீற்றர் ஓட்டம் - இறுதி, 19 வயது ஆண் 400 மீற்றர் ஓட்டம் - இறுதி, 21 வயது பெண் 400 மீற்றர் ஓட்டம் - இறுதி,15 வயது பெண் 400 மீற்றர் ஓட்டம் - இறுதி, 21 வயது பெண் முப்பாய்ச்சல் - இறுதி, 19 வயது பெண் 400 மீற்றர் ஓட்டம் - இறுதி, 15 வயது ஆண் 100 மீற்றர் தடைதாண்டல் - தெரிவு, 19 வயது பெண் முப்பாய்ச்சல் - இறுதி, 17 வயது பெண் 100 மீற்றர் தடைதாண்டல் - தெரிவு, 13 வயது பெண் உயரம் பாய்தல் - இறுதி, 21 வயது பெண் 100 மீற்றர் தடைதாண்டல் - தெரிவு, 15 வயது பெண் 100 மீற்றர் தடைதாண்டல் - தெரிவு, 19 வயது ஆண் 110 மீற்றர் தடைதாண்டல் - தெரிவு, 19 வயது பெண் 100 மீற்றர் தடைதாண்டல் - தெரிவு, 15 வயது ஆண் 100 மீற்றர் தடைதாண்டல் - இறுதி, 17 வயது ஆண் 110 மீற்றர் தடைதாண்டல் - தெரிவு, 21 வயது பெண் 100 மீற்றர் தடைதாண்டல் - இறுதி, 21 வயது ஆண் 110 மீற்றர் தடைதாண்டல் - தெரிவு, 15 வயது பெண் 100 மீற்றர் தடைதாண்டல் - இறுதி, 21 வயது ஆண் 110 மீற்றர் தடைதாண்டல் - இறுதி.

(மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் பின்னர் வெளிவரும்).

## வலிகாமத்தில் உடற்பயிற்சிப் போட்டி

வேலணை ,ஏப்.27

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் நாளை செவ்வாய்கிழமை ஸ்கந்தரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(1- 267)

## கே.ஸி.ஸி.ஸி.கிண்ணச் சுற்றுப்போட்டி

## ஜொலிஸ்ரார் 17 ஓட்டங்களால் வெற்றி

வலி வடக்கு ஏப்-27

கே. ஸி. ஸி .ஸி வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே லீக்முறையில் நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்ட மொன்றில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 17 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

உமாதரன்78,சிவராஜ்,டிலக்சன், ஜனார்த்தனன் தலா 22ஓட்டங்களையும் நிரஞ்சன் 19 ஓட்டங்களையும், கோபி 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 28 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் மத்தியசன சமூக நிலைய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ராகுலன் 05 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும்,தீபன், பிரதீபன் 06 ஓவர்கள் பந்து வீசி தலா 02 விக்கெட்டுக்களையும் நிரோஜன், றொபேசன் 06ஓவர்கள் பந்து வீசி 17, தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் தேசிய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் 30 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

றொபேசன் 39,பங்குஜன் 24,சிவா, தீபன் 21,சசிகரன் 20, பார்த்தீபன் 13 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 26 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் பந்து வீசிய ஜனார்த்தனன்,பகீதரன் 0[illegible]கள் பந்து வீசி தலா 03 விக்கெட்டு[illegible]யும், உமாகரன் 06 ஓவர்கள் பந்து வீசி [illegible] ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் நாதன் 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்ர்கள்.

(1-86)

## திருநெல்வேலி வி.கவுக்கு 6 விக்கெட்டுக்கள் வெற்றி

வலி.வடக்கு,ஏப்.27

கே. ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே லீக் முறையில் நடத்திவரும் 30 ஓவர் களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட்போட்டி ஆட்டமொன்றில் திருநெல்வேலி மத்திய விளையாட்டுக் கழகம் 06 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் வலிகாமம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் திருநெல்வேலி மத்தி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 23.5 ஓவர் களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துலக்சன் 19 ஓட்டங்களையும், விஜீதரன் யுகராஜ் தலா 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 29 ஓட்டங்களும் பெறப்பட் டன.

திருநெல்வேலி மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சைலேஸ்வரன் 05 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 16 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், கோபி 06 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும். பிரதீப் 5.5 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட் டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், சுரேஷ்17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி மத்திய வின்ளையாட்டுக்கழகம் 15.5 ஓவர்களில் 04 விக்கெட்டுக்களையும் இழந்து 92 ஓட்டங்களைப்பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

அசோக் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களையும், சுரேஷ் 16 ஓட்டங்களையும்,ஜெயதாஸ் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 21 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த பென்ஜோ 04 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 07 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் தஜீகன், துலக்சன், சதீஸ்கண்ணா தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

(1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் அண்மையில் நடத்தப்பட்டன.

இறுதி ஆட்டத்தில் அணிகள் மோதும் காட்சியை முதலாவது படத்திலும், இறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற சாவகச்சேரி வின்டோஸ் வி.க.அணிக்கு பிராந்தியத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் வெற்றிக் கிண்ணம் வழங்குவதை இரண்டாவது படத்திலும், ஆட்ட நாயகன், தொடர்நாயகன் விருதுகளோடு, வெற்றி பெற்ற வின்டோஸ் வி.க.அணியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள் - தென்னவன்,அருணன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## இச்சங்கத்திலுள்ள கீழே குறிப்பிடப்படும் பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பதவி: பொதுமுகாமையாளர்

சம்பளக் குறியீடு: 101: 09 (கூ.ஊழியர் ஆணைக்குழுவின் 66/6 சுற்று நிருபம்)

சம்பளத் திட்டம்: 10950-13650 / 130X10-140X10

**1.தகைமைகள்**

அ. கூட்டுறவு பணியாளரின் 10ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்ட பதவியொன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த பதவியொன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி சான்றிதழ் அல்லது அதற்குச் சமனான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

இ. கூட்டுறவுப் பணியாளர் (உயர்தர) சான்றிதழ் / கல்வி பொது தராதரம் (உயர்தரம்) என்பவற்றில் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவியொன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**2.வயதெல்லை**

அ. 18-45 வரை

ஆ. தற்போது கூட்டுறவு சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், அவர்கள் பதவிக்கு விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கங்களினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுத்துமிடத்து நியமனத்தை இல்லா தொழிப் பதற்கும் வழிவகுக்கும்.

3. பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் கணணியால் தட்டச்சுசெய்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து பதிவுத்தபால் மூலம் **“தலைவர், காரைநகர், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், அல்லின் வீதி, காரைநகர்”** என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

4. விண்ணப்ப முடிவுத் திகதி: 15.05.2009

குறிப்பு: தங்களிடம் உள்ள கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் என்பவற்றின் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி வைக்கவும்.

24.04.2009

தலைவர்,
பனை தென்னை வள
அபிவிருத்தி கூ. சங்கம்,
காரைநகர்.

(ச/558220)

# இடம் பெயர்ந்தோரை சந்திக்க ஊடகவியலாளருக்கு அனுமதியில்லை

**பி.பி.ஸி நிருபர் கிறிஸ் மூவிஸ்**

அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் மோதல் நடைபெறும் பிரதேசங்களுக்கு செல்வதற்கோ அல்லது அந்த பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் மக்களைச் சந்திப்பதற்கோ சர்வதேச ஊடகங்களுக்கு சுயாதீனமான- சுதந்திரமான வழிகள் இல்லை- மறுக்கப்படுகின்றது. தெற்காசிய விவகாரங்களை கையாளும் செய்தியாளர்களுக்குக் கூட இலங்கை செல்வதற்கான வீசா பெறுவது என்பது முடியாத காரியமாகவுள்ளது.

பி.பி.ஸி ஊடகவியலாளர் கிறீஸ் மூவிஸ் மேற்கண்டவாறு தனது ஆய்வு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். இது குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- இலங்கை தொடர்பான விடயங்களை- மோதல் நடைபெறும் பிரதேசங்களிலுள்ள செய்திகள் எதுவாயினும் அரசாங்கம் மூலமாக வெளியிடப்படுவதில் இருந்தும் விடுதலைப்புலிகளுக்கு அனுதாபம் காட்டுகின்ற சில இணையதளங்கள் வெளியிடுவதில் இருந்தும் மட்டுமே உலக நாடுகள் அறிந்து கொள்ள முடிகிறது. அங்கு களத்தில் நடக்கும் போருக்கு சமாந்தரமாக இருதரப்பும் ஒரு பிரசாரப் போரையே நடத்துகின்றன. அங்குள்ள உண்மை நிலையை உறுதிப்படுத்துவது என்பது முடியாத காரியமாக உள்ளது.

சுற்றுலாப் பயணிகளாக வரும் செய்தியாளர்கள் கூட விமான நிலையத்தில் வைத்து திருப்பி அனுப்பப்படுகிறார்கள். மோதல் இடம் பெறும் வடபகுதிக்குச் செல்ல முயற்சித்த பலர் போர் வலயத்திற்குச் செல்லும் வழியில் மிக நீண்ட தூரத்தில் இருக்கின்ற பல தொடர்ச்சியான சோதனைச் சாவடிகளில் வழிமறிக்கப்படுகின்றனர். செய்தியாளருக்கு பாதிப்பு ஏற்படாது இருப்பதற்காக மேற்கொள்ளுகிற முன்னேற்பாடான வளர்ச்சி- செயற்பாடு என அரசு தரப்பு பதிலளிக்கின்றது. உள்ளூர் செய்தியாளர்கள் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகின்றார்கள். கடந்த காலத்தில் கூட பல சுயாதீன ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

விடுதலைப்புலிகள் மிகச்சிறிய பிரதேசத்திற்குள் ஒதுக்கித் தள்ளப்பட்டுள்ளார்கள், ஆனால் அவர்கள் தம்மால் ஆளப்பட்ட பகுதிகளை இரும்புக்கரம் கொண்டு கட்டுப்படுத்தியிருக்கின்றார்கள். மாற்று கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. சமாதான காலப் பகுதியில் புலிகளுக்கு ஆதரவான பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இலங்கை அரசினால் கூட விமர்சனங்களை சகித்து கொள்ள முடியாத ஒன்றாகவே இருந்து வருகின்றது.

இந்த வாரம் தான் இலங்கைக்கு சென்றிருந்த போது இலங்கைப் பாதுகாப்பு செயலரான கோத்தபாயராஜபக்ஷ ‘போர்காலத்தில் கூறப்படும் அனைத்து மாற்று கருத்துக்களும் துரோகம்’ எனக் கூறியிருந்தார்.

25 வருடகாலமாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் விடுதலைப்புலிகளை தோல்வியடையச் செய்வது என்பது தம் கையில் தான் இருக்கின்றது. என்பதை எம்மால் உணரமுடிகின்றது. ஆனால் வடக்கில் என்ன நடக்கின்றது என்பதை சுதந்திரமாக அறிந்து கொள்ள முடியாது இருக்கிறதே என்ற கவலை உலகெங்கும் அதிகரிக்கின்றது- என்று குறிப்பிட்டுள்ளார்..

# 6ஆம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம் 15★05★1933

மறைவு 21★04★2003

## அமரர் ஐயம்பிள்ளை கந்தையா

ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
நெஞ்சைவிட்டு அகலாது உம் நினைவுகள்
அன்பால் அரவணைத்து, வளர்த்து, அறிவூட்டி
எமது உயர்விற்காய் அத்தனையும் ஈந்து
ஒளியாகி, உயிராகி, உறவாகி நின்ற
எங்கள் பாசச் சுடரே! தங்கள் திதியாகிய
இன்று தங்கள் ஆத்மா சாந்தி பெற
மண்கும்பான் வெள்ளைப் புற்றடி விரகத்தி
விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*20/33, ஆஸ்பத்திரி வீதி,*
*வைரவர் கோயில் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

நிரந்தர முகவரி:
*மண்கும்பான்* (84718)

உம் நினைவுகள் சுமந்த
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 06 . 06 . 1956



அரன் அடியில் 28 . 03 . 2009

## அமரர் பூபாலு வல்லிபுரம்

அன்பூட்டி அரவணைத்த அப்பாவே, அப்பாவே
அருகிருத்தி பல கதையும் சொல்லுவாய்
பண்பான பிள்ளைகளாய் நாமும்
பலரும் காண வாழ வைத்தாய்
கண்போன்ற கல்வியை எமக்களிக்க
அரும்பாடுபட்டு உழைத்தீர்
புண்பட்டு எம் உள்ளம் வாடவிட்டு
சென்றதனால் ஏங்கி நின்று தவிக்கிறோமே.

இன்று (27.04.2009) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும், மதியபோசனதிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

*பிள்ளையார் கோயில் வீதி,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.* (சி/558211)

மனைவி- செந்தகுமாரி,
பிள்ளைகள்- சுபாசன், விபுலன்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கட்டுடை, மானிப்பாயைப்
பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

## கந்தையா கனகம்மா

அன்னை மடியில்: 02.10.1924
இறைவன் அடியில்: 27.03.2009

குடும்பத்தின் ஒளி விளக்காய்
அன்பின் இருப்பிடமாய்
நற்பண்புகளுடன் எமை வழிநடத்தி
எமக்காகவே வாழ்ந்த எம்
அன்புத் தெய்வமே!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாப் பயணம் சென்றாயோ
எம் உயிர் உள்ள
ஒவ்வொரு கணமும்
உங்கள் நினைவுகளுடன் வாழ்வோம்.

கடந்த *27.03.2009* அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப ஒளி விளக்கின் இறுதிக்கிரியைகளில் உதவி புரிந்தோருக்கும் தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று *(27.04.2009)* திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கட்டுடை,
மானிப்பாய். (84726)

மகன்,
B.தினேஸ் (பேரன்).

# ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்


## நடராஜா இரவிச்சந்திரன்

[அப்பி]

தோற்றம் 23.08.1960

மறைவு 06.05.2008

திதி: பூர்வபக்க பிரதமை (27.04.2009)



ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எம் துயர்
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

41/ 3, கொண்டலடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
மனைவி,
பிள்ளைகள்.

(84710)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பிரதேச செயலக கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.27

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டி - 2009 முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:

**கட்டுரை -கனிஸ்ட பிரிவு .**

1ஆம் இடம் - சின்னத்தம்பி இலக்கியா (மீசாலை வீரசிங்கம் ம.வி), 2ஆம் இடம் - புண்ணியமூர்த்தி நிடோஜினி(மீசாலை வீரசிங்கம் ம.வி), 3ஆம் இடம் - ஸ்ரீதரன் ரம்யா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

**சிரேஸ்ட பிரிவு**

1ஆம் இடம் - க.மனோஜா (மீசாலை வீரசிங்கம்ம.வி), 2ஆம் இடம் - யோகேஸ்வரன் கஜேந்தினி (மீசாலை வீரசிங்கம் ம.வி), 3ஆம் இடம் - ந.கோபிகா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

**கவிதை- கனிஸ்ட பிரிவு**

1ஆம் இடம்- நாகராசா ஜனனி (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி), 2ஆம் இடம்- கனகசிங்கம் ஜெசிந்தா (கச்சாய் அ.த.க.பாடசாலை), 3ஆம் இடம் - தர்மலிங்கம் கிர்சிகா (ஸ்ரீபழனி ஆண்டவர் அறநெறி பாடசாலை).

**சிரேஸ்ட பிரிவு**

1ஆம் இடம்- சி.சுரேகா (மீசாலை வீரசிங்கம் ம.வி), 2ஆம் இடம் - தபேந்திரன் வைகீர்த்தா (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி), 3ஆம் இடம் - க.மனோசா - (மீசாலை வீரசிங்கம் ம.வி).

**சிறுகதை-சிரேஸ்ட பிரிவு**

1ஆம் இடம் - க.மனோகா -(மீசாலை வீரசிங்கம்ம.வி), 2ஆம் இடம் - செல்வராசா லாகினி (மீசாலை வீரசிங்கம் ம.வி).

**கவிதை (ஆங்கிலம்)-கனிஷ்ட பிரிவு**

1ஆம் இடம் - முத்துலிங்கம் அபிராமி (சாவகச்சேரி ஸ்ரீபழனி ஆண்டவர் அறநெறி பாடசாலை), 2ஆம் இடம் - உதயகுமார் தேனுகானி (சாவகச்சேரி ஸ்ரீபழனி ஆண்டவர் அறநெறி பாடசாலை), 3ஆம் இடம் - மோகனதாசன் நேருஜா (சாவகச்சேரி ஸ்ரீபழனி ஆண்டவர் அறநெறி பாடசாலை).

**திறந்த போட்டிகள்-சிறுகதை**

1ஆம் இடம் - வைரமுத்து சின்னப்பா - (சங்கத்தானை சாவகச்சேரி), 2ஆம் இடம் - கனகரத்தினம் சுவேதிகா (தாவளை இயற்றாலை), 3ஆம் இடம் - நடராசா லோஜனவனிதை (கண்டி வீதி, சாவகச்சேரி).

**கவிதை**

1ஆம் இடம் - நாகராச தேவராளி (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தரோதய ம.வ.), 2ஆம் இடம் - இராசதுரை சிவகாமசுந்தரி (மீசாலை வடக்கு),3ஆம்இடம்-நடராசா சடாதரன் (மட்டுவில் சந்திரபுரம் ஸ்கந்தவரோதய ம.வி).

**பாடலாக்கம்**

1ஆம் இடம் - முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம் (மந்துவில் மேற்கு), 2ஆம் இடம் - வைரமுத்து சின்னப்பா ( சங்கத்தானை சாவகச்சேரி), 3ஆம் இடம் - சிவகுமார் சிவாஜினி ( கல்வயல் 1ஆம் கட்டை).

**கவிதை (ஆங்கிலம்)**

1ஆம் இடம் - வைரமுத்து சின்னப்பா (சங்கத்தானை சாவகச்சேரி), 2ஆம் இடம் - சண்முகநாதன் உருத்திராதேவி (டச்சு வீதி சாவகச்சேரி), 3ஆம் இடம் - ம.தே. நிறோஜன் (மட்டுவில் தெற்கு).

**பாடலாக்கம் (ஆங்கிலம்)**

1ஆம் இடம் - எம்.பி.சண்முகநாதன் (டச்சு வீதி சாவகச்சேரி), 2ஆம் இடம் - திருமதி உ.சண்முகநாதன் (டச்சு வீதி சாவகச்சேரி), 3ஆம் இடம் - வைரமுத்து சின்னப்பா (சங்கத்தானை). (04- 207-59)

# போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நாவின் உதவிகள் அதிகரிக்கப்படும்

## அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் அறிக்கை

வடக்கே போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் உதவிகளை மேலும் அதிகரிக்கப் போவதாக ஐ.நா.தூதரக அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அறிவித்துள்ளது.

நாட்டில் நடைபெறும் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்துள்ளவர்களுக்கு உதவ சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என இலங்கை அரசு விடுத்துள்ள கோரிக்கையை அடுத்தே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில், அவசர கால நடவடிக்கையாக டுபாயிலுள்ள அலுவலகத்திலிருந்து 5000 இலகு ரக கூடாரங்கள் வட பகுதிக்கு எடுத்து வர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவசரகால உதவிகளை மேற்கொள்ளும் ஐ.நாவின் குழுவொன்றும் உடனடியாக அங்கு செல்லவுள்ளது. போரினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு உடனடியாக உதவும் வகையில் இலங்கைக்கான நிதி ஒதுக்கீடு 35 சதவீதம் அதிகரிக்கப்படும். இந்த கூடுதலான 4.3 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி அரச மற்றும் தனியார் கொடையாளிகளிடமிருந்து பெறப்படும்.இடம் பெயர்ந்துள்ள நிலையில் சிரமங்களை எதிர்கொள்ளும் பொதுமக்களுக்கு உதவும் வகையிலேயே இந்நிதி கோரப்பட்டுள்ளது.

வவுனியா,யாழ்ப்பாணம், மற்றும் திருகோணமலையைச் சுற்றியுள்ள இடங்களில் இருக்கும் 35 இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்காக 210 தொன் உதவிப் பொருள்கள் விமானம் மூலம் கொண்டு வரப்படும். இம்முகாம்களில் தங்கியுள்ளவர்கள் மிகவும் நெருக்கடியான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக 'மெனிக் பாம்' முகாம்களில் 4 அல்லது 5 பேர் மட்டுமே இருக்கக் கூடிய கூடாரங்களில் 8 - 10 பேர் வரை தங்கியுள்ளனர். தேவைப்படும் மக்களுக்கு உடனடியாக கூடாரங்களை அமைத்து நீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க கூடுதலாக இடவசதி செய்து தருமாறு இலங்கை அரசிடம் கோரப்பட்டுள்ளது.இதற்காக அரச மற்றும் பொதுக் கட்டடங்களை ஒதுக்குமாறும் கோரப்பட்டுள்ளது. தற்போது வவுனியா போன்ற இடங்களிலேயே இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் தினங்களில் மேலும் பலர் போர்ப் பகுதிகளிலிருந்து இங்கு வரக் கூடும் என்பதால் உடனடியாக கூடுதலான நிலப்பரப்புகளை கூடாரங்கள் அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்ய அரசு முன் வர வேண்டும்

எமது பணிகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு அரசாங்கம் பார்த்துக் கொள்ள வேண்டும். என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(04)

# வீடமைப்புத் திட்டம் பெற்றுத் தருமாறு அம்பன் பகுதி மக்கள் கோரிக்கை

வடமராட்சி, ஏப்.27

சுனாமியாலும், யுத்த சூழ்நிலையாலும் பாதிக்கப்பட்டு வீடற்ற நிலையில் மண் குடிசைகளிலும், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ள அம்பன் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு வீடமைப்புத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பதினொரு குடும்பங்களைச் சேர்ந்தோர் இது தொடர்பாக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், சமூகசேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயப் பகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த நாங்கள் 2000ஆம் ஆண்டு யுத்த சூழ்நிலையால் வீடுகளை இழந்தோம். இதன் பின்னர் மண் குடிசையில் வாழ்ந்து வந்த நாங்கள் 2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் மண் வீடுகளையும் இழந்தோம்.

இப்பிரிவில் வாழும் ஏனைய குடும்பங்களுக்குச் சுனாமி வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. எமக்கு மட்டும் இது வரை வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை. எனவே எமக்கு ஒரு வீட்டுத் திட்டத்தை ஏற்படுத்தித் தாருங்கள் [illegible] மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ([illegible])

# கல்விச்சாலைக் காட்சிகள்



அண்மையில் நடைபெற்ற 2008ஆம் ஆண்டுக்கான அகில இலங்கைத் தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் பங்குபற்றி நடனம் குழு 1 இல் முதலாம் இடத்தையும் இசைக் குழு 1 இல் இரண்டாம்இடத்தையும் பெற்ற யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களையும் கல்லூரி அதிபர் இ.ஓங்காரமூர்த்தி பொறுப்பாசிரியர்கள் வி.அனிருத்தன், திருமதி உ.சிவகுமார், க.சுகுணைச்செல்வி, வினோதராஜ் மற்றும் அணிசெய் கலைஞர்கள் ஆகியோரையும் படத்தில் காணலாம். (224)



எழுவைதீவு முருகவேள் வித்தியாலய ஆசிரியர்களுக்கும் எழுவைதீவு பத்திமா விளையாட்டுக்கழக வீராங்கனைகளுக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வ தாச்சிப் போட்டியின்போது எடுக்கப்பட்ட படம். (325)



ஆனைக்கோட்டை ஆர்.சி.ரி.எம் பாடசாலை மாணவ மாணவிகளுக்கு சமாதான - நல்லிணக்கப் பணியக செயற்றிட்ட உறுப்பினர்கள் சமாதானக் கல்வி தொடர்பாக விழிப்புணர்வூட்டுவதை படத்தில் காணலாம்.



மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டி லிப்பாய் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் வாசுகி சுபாகரன் கௌரவ விருந்தினர்களான மாரீசன்கூடல் பங்குத்தந்தை அருட்திரு ஏ.சி.கிறிஸ்தோப்பர், புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு ஜேம்ஸ் சிங்கராயர் பாடசாலை அதிபர் சூ. நோபேட் உதயகுமார் மற்றும் பாடசாலை ஆசிரியர்களை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசின் நடவடிக்கையால் இந்தியாவுக்கு ஆபத்து!

## எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி குற்றச்சாட்டு

ஹாசன், ஏப். 27

இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசின் போக்கற்ற நடவடிக்கையால் இந்தியாவுக்கு ஆபத்து அதிகரித்து விட்டது - என்று, பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளர் அத்வானி குற்றஞ் சாட்டியுள்ளார்.

கர்நாடகத்தில் 2ஆவது கட்டத் தேர்தல் நடைபெறும் ஹாசன் தொகுதியில் பா.ஜ.க. சார்பில் தேர்தல் பிரசாரப் பேரணி நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசானது, வலுவான வெளிநாட்டுக் கொள்கையை வகுப்பதில் தோல்வியடைந்து விட்டது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தவறான வெளிநாட்டுக் கொள்கைகளை கடைப்பிடித்தது. அண்டை நாடுகளுடன் இணக்கமான, சுமுகமான நட்புறவை கடைப்பிடிக்கவில்லை. இதன் காரணமாக உலக நாடுகள் இந்தியாவை மதிப்பு குறைவாக பார்க்கின்றன.

மேலும் இலங்கை, வங்காளதேசம், பாகிஸ்தான், நேபாளம் போன்ற அண்டை நாடுகளுடன் நல்ல முறையில் நட்புறவு வைத்துக்கொள்ளவில்லை. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசின் நடவடிக்கையால் இந்தியாவுக்கு ஆபத்து அதிகரித்து உள்ளது. இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை, வங்காளதேசத்தில் இருந்து ஊடுருவல் அதிகரிப்பு, பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் ஆதிக்கம் அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளாலும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே, நாட்டின் நலனை பாதுகாக்க, காங்கிரஸ் கட்சியை விரட்டியடித்து, பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசை ஆட்சியில் அமர்த்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.



பா.ஜ.க. ஆட்சி அமைந்தால் நாடு வளமையைக் காணும், பொருளாதார முன்னேற்றம் அடையும் என்று உறுதி அளிக்கிறேன் - என்றார்.

# ஈழப் போராளிகளின் போராட்டத்தை மதித்து இரக்கம் காட்ட வேண்டும்

## சீக்கிய டால் கல்சா கட்சி கோரிக்கை

இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை துரித கவனம் செலுத்த வேண்டும் - என்று இந்திய சீக்கியர்கள் அமைப்பான டால் கல்சா கட்சி வலியுறுத்தியுள்ளது.

இந்தக் கட்சியின் அரசியல் துறை பொதுச் செயலர் கன்வர் பால் சிங் நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார். இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வை முன்வைத்து, அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என அவர் கோரியுள்ளார்.

அத்துடன், தனித் தமிழீழம் வேண்டி போராடும் போராளிகளின் போராட்டத்தை மதித்து, அவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பிரபாவுக்கு இன்னும் 20 ஆண்டுகள் போராடக்கூடிய சக்தி இருக்கிறது!

## அவரை யாராலும் பிடிக்க முடியாது என்கிறார் ராமதாஸ்

பிரபாகரனை யாராலும் பிடிக்க முடியாது. பிரபாகரனுக்கு இப்போது வயது 54. இன்னும் 20 ஆண்டுகள் காலம் போராடக் கூடிய சக்தி அவருக்கு இருக்கிறது.

- இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் ஆவேசமாக முழங்கித் தள்ளியுள்ளார்.

சைதாப்பேட்டை தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் பேசியபோதே அவர் இவ்வாறு சென்னார். மேலும் அவர் அங்கு பேசியவை வருமாறு -

இலங்கையில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி, வெளியுறத்துறை செயலாளர் சிவ்சங்கர் மேனன், தேசிய ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஆகியோர் இலங்கை அரசிடம் போர் நிறுத்தத்தை வலியுறுத்தவில்லை.

ஈழத் தமிழர்களுக்கு இந்திய அரசு சவப்பெட்டிகளை செய்து அனுப்புகிறது. அங்கே கொத்துக் கொத்தாகக் குண்டுகளைப் போட்டு இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர்.

தமிழர்களை வேகமாகக் கொல்லுங்கள் என்று சொல்வதற்காகத்தான் இந்திய அமைச்சரும், அதிகாரிகளும் இலங்கைக்குச் சென்றிருக்கின்றனர். ஏழைகளை ஒழித்து விட்டால் வறுமை இருக்காது என்று சொல்லும் கூட்டத்தைப் போல தமிழர்களை ஒழித்து விட்டால் பிரச்சினை இருக்காது என்று கருதுகிறார்கள்.

அமெரிக்கா கூட இன்றும், போரை நிறுத்து என்று இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்து இருக்கிறது. ஆனால் இலங்கை ஜனாதிபதி மஹிந்த யாருடைய பேச்சையும் கேட்கத் தயாராக இல்லை.

பிரபாகரனைப் பிடித்து விடுவார்கள், பிரபாகரனைக் கொன்று விடுவார்கள் என்று பிரசாரம் செய்து வருகின்றனர். இதுபோல பல முறை சொல்லி பிரபாகரனைச் சாகடித்து இருக்கின்றனர். பிரபாகரனை யாராலும் பிடிக்க முடியாது. பிரபாகரனுக்கு இப்போது வயது 54. இன்னும் 20 ஆண்டுகாலம் போராடக் கூடிய சக்தி அவருக்கு இருக்கிறது.

பிரபாகரனை தீவிரவாதி என்றும், விடுதலைப் புலிகள் இயக்கத்தை தீவிரவாத இயக்கம் என்றும் சொல்லி வருகின்றனர். இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங்கைக் கூட அப்படித்தான் சொன்னார்கள். சுபாஸ் சந்திர போஸை அப்படித்தான் சொன்னார்கள். விடுதலைக்காக போராடக் கூடியவர்களை அப்படித் தான் சொல்வர் - என்றார்.

# எங்கள் சகோதரர்களைக் காப்பாற்றுங்கள்; ஈழ அகதிகள் உண்ணாவிரதத்தில் உருக்கம்!

கும்மிடிப்பூண்டி, ஏப். 27

கும்மிடிப்பூண்டியில் உள்ள இலங்கைத் தமிழர் முகாமைச் சேர்ந்தவர்கள் சனிக்கிழமை நடத்திய உண்ணாவிரதத்தில் தமிழ் இனத்தை காப்பாற்றும் படி இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

கும்மிடிப்பூண்டியில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் 950 குடும்பங்களைச் சேர்ந்த 3,573 பேர் வசிக்கின்றனர்.

இலங்கையில் போர் கடுமையாக நடைபெறுவதைத் தொடர்ந்து கடந்த ஒரு மாதமாக போர் நிறுத்தத்தை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று அடையாள உண்ணாவிரதம் இருக்க உயர் அதிகாரிகளிடம் அனுமதி கோரிய நிலையில், கடந்த வியாழக்கிழமை உண்ணாவிரதம் இருக்க அனுமதி கிடைத்தது.


முகாமைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும், பாடசாலை, கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தில் இலங்கை அரசை கண்டித்து, 'ஈழம் வெல்லும் அதைக் காலம் சொல்லும்' போன்ற எழுதப்பட்ட வாசகங்களுடன் உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்தனர்.

அதேபோல் இலங்கையில் போர்நிறுத்தம் கோரி உயிர்த் தியாகம் செய்தவர்களின் உருவப் படங்களை தாங்கி இளைஞர்கள் ஊர்வலமாக வந்தனர்.

தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சியினரும் கட்சிப் பாகுபாடு பார்க்காமல், இலங்கையில் வாழும் எங்கள் சகோதரர்கள் அழிந்து போகாமல் பாதுகாக்க மத்திய அரசையும், உலக நாடுகளையும் கேட்டுக்கொள்கிறோம் - என்று அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

# 'ஹெட்ரிக்' வெற்றியில் டெக்கான் சார்ஜர்ஸ் 12 ஓட்டங்களால் தோற்றது மும்பை அணி



டர்பன், ஏப்.27

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸை தோற்கடித்து ஹைதராபாத் டெக்கான் அணி 'ஹெட்ரிக்' வெற்றியை ருசித்தது.

2ஆவது ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் நடந்து வருகிறது. இதில் 8 அணிகள் பங்கேற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா 2 முறை மோதவேண்டும். லீக் போட்டிகளின் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிச் சுற்றை எட்டும்.

போட்டியின் 8ஆவது நாளான நேற்று முன்தினம் டர்பனில் நடந்த ஒரு ஆட்டத்தில் ஹைதராபாத் டெக்கான் சார்ஜர்ஸ் அணியும், மும்பை இந்தியன்ஸ் அணியும் சந்தித்தன. டெக்கான் அணியில் ஒரே ஒரு மாற்றமாக ஸ்ரைரிஸுக்குப் பதிலாக வெய்ன் ஸ்மித் (மேற்கிந்தியத் தீவுகள்) சேர்க்கப்பட்டிருந்தார்.

நாணயச் சுழற்சியில் வென்ற டெக்கான் அணித் தலைவர் கில்கிறிஸ்ட் முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். இதையடுத்து அவரும், கிப்ஸும் டெக்கான் அணியின் இன்னிங்ஸைத் தொடங்கினார்கள். இருவரும் துடிப்புடன் ஆடியதால் ஓட்ட வேகம் கணிசமாக உயர்ந்தது. முதல் விக்கெட்டுக்கு 63 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. கில்கிறிஸ்ட் 35 ஓட்டங்களில் (20 பந்து, 3 பவுண்டறிகள், 3 சிக்ஸர்கள்) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வெய்ன் ஸ்மித்தும் கலக்கலாக ஆடினார். இதனால் டெக்கான் அணி 200 ஓட்டங்களை நெருங்கும் போல் தெரிந்தது. ஆனால் இந்தக் கூட்டணி உடைந்ததும் அணியின் ஓட்டவேகம் சற்று குறைந்தது. ஸ்மித் 35 ஓட்டங்கள் (22 பந்து, 2 சிக்ஸர்கள், 2 பவுண்டறிகள்) விளாசிய நிலையில் ஜெயசூர்யாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் வந்த வீரர்கள் ஒருவர் கூட இரட்டை இலக்கைத் தொடவில்லை. மறுபுறம் அபாரமாக ஆடிக்கொண்டிருந்த கிப்ஸ் 58 ஓட்டங்களில் (44 பந்து, 6 பவுண்டறிகள், 3 சிக்ஸர்கள்) ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இறுதிக் கட்டத்தில் டெக்கான் அணிக்கு எதிர்பார்த்த ஓட்டங்கள் சேரவில்லை. 20 ஓவர்கள் முடிவில் டெக்கான் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களைச் சேர்த்தது. மும்பை அணி சார்பில் மலிங்க, பிராவோ ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்கள்.

தொடர்ந்து ஆடிய மும்பை இந்தியன்ஸ் அணியில் அதிரடி நாயகன் ஜெயசூர்யா ஒரு ஓட்டத்துடன் வீழ்ந்ததால், லேசான அதிர்ச்சி ஏற்பட்டது. இருப்பினும் 2ஆவது விக்கெட்டுக்கு இணைந்த அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கரும், டுமினியும் அணியை சரிவில் இருந்து மீட்டனர். அணியும் நல்ல நிலைமைக்கு வந்தது. 10 ஓவர் இடைவேளையின்போது ஒரு விக்கெட்டுக்கு 84 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அப்போது வெற்றி வாய்ப்பு இரு அணிக்கும் சரிசமமாக இருந்தது.

இதன் பின்னர் சுழற்பந்துவீச்சாளர் ஓஜா ஆட்டத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தினார். அவரது பந்து வீச்சில் கிப்ஸிடம் பிடிகொடுத்த டெண்டுல்கர் 36 ஓட்டங்களில் (27 பந்து, 3 பவுண்டறிகள், 2 சிக்ஸர்கள்) ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த தவான் (3 ஓட்டங்கள்), டுமினி (47 ஓட்டங்கள், 40 பந்து, 4 பவுண்டறிகள், 2 சிக்ஸர்கள்) ஆகியோரும் ஓஜா பந்துக்கு இரையானார்கள்.

அடுத்தடுத்து விக்கெட்டுகள் சரிந்ததால் டெக்கான் அணியின் கை ஓங்கியது. இதன் பின்னர் பிராவோ, ஹர்பஜன்சிங் ஆகியோரின் ஆட்டம் மும்பை அணிக்கு லேசான நம்பிக்கை தருவதுபோல் இருந்தது. கடைசி 2 ஓவரில் மும்பை அணியின் வெற்றிக்கு 26 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இதில் 19ஆவது ஓவரை வீசிய எட்வர்ட்ஸ் பிராவோவின் (21 ஓட்டங்கள்) விக்கெட்டை வீழ்த்தி 4 ஓட்டங்கள் மட்டுமே விட்டு கொடுத்தார்.

இதைத் தொடர்ந்து கடைசி ஓவரில் 22 ஓட்டங்கள் தேவைப்பட்டதால் பரபரப்பு நிலவியது. 20ஆவது ஓவரை ஆர்.பி.சிங் வீசினார். முதல் பந்தில் ஷகீர்கான் ஒரு ஓட்டம் எடுத்தார். 2ஆவது பந்தில் அசத்தலாக சிக்ஸர் விளாசிய ஹர்பஜன்சிங், அடுத்த பந்தில் அதே போல் முயற்சித்து ஆட்டமிழந்தார். அவர் 20 ஓட்டங்களில் (8 பந்து, ஒரு பவுண்டறி, 2 சிக்ஸர்கள்) பெவிலியன் திரும்பினார். ஹர்பஜன்சிங் வீழ்ந்ததும், மும்பை அணியின் நம்பிக்கை தகர்ந்தது. எஞ்சிய 3 பந்துகளில் 2 ஓட்டங்கள் மட்டுமே வந்தது. 20 ஓவர்களில் மும்பை அணியால் 7 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது.

இதனால் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெக்கான் அணி வெற்றிபெற்றது. மும்பை அணியைக் கட்டுப்படுத்தியதில் பெரும் பங்குவகித்த டெக்கான் பந்துவீச்சாளர்கள் ஓஜா 3 விக்கெட்டுகளும், எட்வேட்ஸ், ஆர்.பி.சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர். ஓஜா ஆட்ட நாயகன் விருதுபெற்றார். டெக்கான் அணி தொடர்ச்சியாகப் பெற்ற 3ஆவது வெற்றி இதுவாகும். முன்னதாக கொல்கத்தா மற்றும் பெங்களூர் அணிகளை வீழ்த்தியிருந்தது. இதன் மூலம் 6 புள்ளிகளுடன் புள்ளிப் பட்டியலில் முதலிடம் வகிக்கிறது.

கடந்த ஆண்டு நடந்த முதலாவது ஐ.பி.எல். போட்டியில் கடைசி இடத்துக்கு (8) தள்ளப்பட்ட டெக்கான் அணி இப்போது கில்கிறிஸ்ட் தலைமையில் புதுவேகம் பெற்று வெற்றிநடை போட்டு வருகிறது. இந்த சீசனில் முதல் 3 ஆட்டத்திலும் வெற்றியை ருசித்த அந்த அணி, கடந்த ஆண்டு முதல் 3 ஆட்டத்திலும் தோல்வியைத் தழுவியிருந்தது குறிப்பிடத்தக்கது.




# இரண்டாவது ஒருநாள் போட்டியில் வென்று பாகிஸ்தானுடன் சமநிலை வகிக்கிறது ஆஸி.

அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகள் இடையே 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் டுபாய் மற்றும் அபுதாபியில் நடந்து வருகிறது. இதில் முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில் 2ஆவது ஒரு நாள் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 46.2 ஓவர்களில் 207 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அதிகபட்சமாக சல்மான் பட் 57 ஓட்டங்களும், அப்ரடி 41 ஓட்டங்களும் எடுத்தனர். தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலிய அணி 45.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 208 ஓட்டங்கள் சேர்த்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சைமன்ஸ் (58 ஓட்டங்கள்), ஹொப்ஸ் (48 ஓட்டங்கள்), அணித் தலைவர் மைக்கல் கிளார்க் (39 ஓட்டங்கள்), வாட்ஸன் (30 ஓட்டங்கள்) உள்ளிட்டோர் அவுஸ்திரேலியாவின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தனர். 3ஆவது ஒரு நாள் போட்டி அபுதாபியில் இன்று நடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குமாறு இணைத்தலைமை நாடுகள் அரசிடம் கோரிக்கை

## மோதலை முடிவுக்கு கொண்டுவரவும் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 27

மோதல்களை முடிவிற்கு கொண்டு வருமாறு இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் இணைத்தலைமை நாடுகள் கேட்டுள்ளன

நடுநிலைமையான மூன்றாம் தரப் பொன்றிடம் ஆயுதங்களை ஒப்படைக்குமாறு விடுதலைப் புலிகளிடமும், விடுதலைப் புலிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு இலங்கை அரசிடமும் அவை கோரியுள்ளன.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் றொபேர்ட் வூட் விடுத்துள்ள செய்தி அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் வட பகுதியில் காணப்படும் மனிதாபிமான நிலை தொடர்பாக இணைத்தலைமை நாடுகள் ஆராய்ந்தன. அமெரிக்காவின் தென்னாசிய, மத்திய, ஆசிய விவகாரங்ளுக்கான உதவி அமைச்சர் ரிச்சர்ட் பௌச்சர் இதில் கலந்துகொண்டார்.

பாதுகாப்பு வலயத்திலிருந்து பொது மக்கள் தப்பியுள்ளனர் என வெளியான செய்திகளை இணைத்தலைமை நாடுகள் வரவேற்றன.

பாதுகாப்பு வலயத்தினுள் சிக்கியுள்ள பெருமளவு மக்கள் குறித்து அவர்கள் ஆழ்ந்த கவலை வெளியிட்டதுடன் பொது மக்கள் வெளியேறுவதை தடுக்கும் விடுதலைப் புலிகளை கண்டித்தனர்.

மேலும் விடுதலைப் புலிகள் பொதுமக்களை விடுவிப்பதற்கான தேவையையும், இலங்கை இராணுவம் பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் இணைத் தலைமை நாடுகள் வலியுறுத்தின.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும், சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதிப்பதுமே இலங்கை அரசினதும் விடுதலைப் புலிகளினதும் முன்னுரிமையாக அமைய வேண்டும் எனவும் அவை அழுத்திக் கூறின.

நிவாரணப் பணிகள், பொதுமக்களை வெளியேற்றுவது போன்றவற்றை மேற்கொள்வதற்காக பாதுகாப்பு வலயத்திற்குள் ஐக்கிய நாடுகள் பணியாளர்களை அனுமதிக்குமாறும் ஐ.நா. செயலாளர் விடுத்த வேண்டுகோளை நாங்கள் முழுமையாக ஆதரிக்கின்றோம்.

புதிதாக இடம்பெயர்ந்தவர்கள் பதிவு செய்யப்படுகின்ற - தங்க வைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்குச் செல்வதற்கு ஐக்கிய நாடுகளுக்கும், செஞ்சிலுவை குழுவிற்கும் அனுமதி வழங்குமாறு இலங்கை அரசை கேட்டுக்கொள்கின்றோம்.

மோதலை முடிவுக்கு கொண்டு வருமாறு இலங்கை அரசையும், விடுத லைப் புலிகளையும் கேட்டுக்கொள்கின்றோம்.

விடுதலைப் புலிகளை நடுநிலையான மூன்றாம் தரப்பிடம் ஆயுதங்களை ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (அ-சி)

## பாடசாலை மாணவர்களுக்கு சித்திரக் கண்காட்சி.

யாழ்ப்பாணம், ஏப்.27

வடமாகாணக் கல்வித் திணைக்களம் பாடசாலை மாணவர்களுக்கு இடையே சித்திரக் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தக் கண்காட்சிக்கான சித்திரங்கள், பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் போட்டியின் மூலமாகத் தெரிவு செய்யப்படவுள்ளதாக வடமாகாண கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக பாடசாலைகள் ஒவ்வொன்றும் மாணவர்களிடையே போட்டிகளை நடத்தி ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த 20 சித்திரங்களைத் தெரிவுசெய்து அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

(6-7-267)

# சீனாவின் இலங்கைக்கான ஆதரவு குறித்து இந்திய உயர் மட்டங்களில் அச்சம்

கொழும்பு, ஏப்.27

இலங்கை இன நெருக்கடி விடயத்தில் சீனா, இலங்கை அரசிற்கு ஆதரவளிப்பதன் நோக்கம் குறித்து புதுடில்லி அரச உயர் வட்டாரங்களில் ஐயப்பாடு எழுந்துள்ளது.

சீனா இந்த விடயத்தில் கொழும்பிற்கு சுயமாக ஆதரவளிப்பது இந்து சமுத்திரத்தில் தனது செல்வாக்கை விஸ்தரிக்க சீனா முயல்கின்றது என்ற புதுடில்லியின் அச்சத்தை மேலும் உறுதி செய்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியப் பத்திரிகை ஒன்று இது குறித்து மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

சீனாவின் ஆதரவை தனித்து நோக்க முடியாது என சுட்டிக்காட்டும் இந்திய மத்திய அரசு வட்டாரங்கள், இலங்கை அரசின் செல்வாக்கை பெறுவதற்கான பல நடவடிக்கைகளை சீனா மேற்கொண்டுள்ளதையும் கோடிட்டு சுட்டிக்காட்டியுள்ளன.

சீனா இலங்கைக்கு கடந்த வருடம் மிகப் பெருமளவு ஆயுதங்களையும், பாரிய ளவு நிதியுதவிகளையும் வழங்கியதையும் -

சீனா அதன் ஜியான் - 7 யுத்த விமானங்கள், விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள், ஜேவை - 113 டி வான்வெளி கண்காணிப்பு ராடர்கள் போன்றவற்றையும் வழங்கியுள்ளமையை சுட்டிக்காட்டியுள்ளது.

**அமெரிக்காவின் நேரடி உதவி நிறுத்தப்பட்ட பின்னர்**

இலங்கையின் மோசமான மனித உரிமை நடைமுறைகள் காரணமாக அமெரிக்கா அதற்கான நேரடி உதவியை நிறுத்திய பின்னரே சீனா கொழும்பிற்கு உதவ முன்வந்தது.

மேலும் தனது சகாவான பாகிஸ்தானை இலங்கைக்கு இராணுவ உதவி வழங்குமாறும், சீனா கேட்டுக்கொண்டுள்ளது.

பாகிஸ்தானின் பொரு[illegible]ரம் அதல பாதாளத்தினுள் உள்ள [illegible]திலும் அது இலங்கைக்கான இராணுவ உதவியை சீனாவின் வேண்டுகோளின்படி அதிகரித்துள்ளது.

இலங்கை விமானப் படையினரின் துல்லியமாகத் தாக்கும் திறனிற்கான பயிற்சியையும் அது வழங்கியுள்ளது.

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் அமைவிடம் காரணமாகவே சீனா இலங்கையை அரவணைக்கிறது. வர்த்தகம் மற்றும் எண்ணெய்க்கான முக்கியமான பாதையாக இலங்கையுள்ளது.

**கடல் வழிகளை தமது கட்டுப்பாடில் வைத்திருக்கும் தந்திரோபாயம்**

இலங்கையின் தென்கிழக்கு அம்பாந்தோட்டையில் சீனப் பொறியியலாளர்கள் பல பில்லியன் டொலர் பெறுமதியான துறைமுகத்தை அமைத்து வருகின்றனர்.

இந்து, பசுபிக் சமுத்திரங்களுக்கு இடையிலான முக்கிய கடல் வழி தொடர்பாடல் பாதைகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான சீனாவின் தந்திரோபாயமே இது.

விடுதலைப் புலிகள் விடயத்தில் கொழும்பிற்கு சீனா ஆதரவளிப்பது குறித்து கடும் அதிருப்தியடைந்துள்ள புதுடில்லி இந்த விடயத்தில் தனக்குள்ள சாதகத் தன்மையை சீனா குழப்ப முயல்கிறது எனக் கருதுகிறது.

இந்தியாவைப்போல இலங்கை விடயத்தில் தலையிட சீனாவிற்கு தார்மீக அவசியம் எதுவும் கிடையாது. இராணுவ நடவடிக்கை முடிவடைந்த பின்னர் அங்கு நாங்கள் (இந்தியா) மனிதாபிமான நிலை குறித்து சிந்திக்க வேண்டும். சீனாவிற்கு உள்நாட்டு அழுத்தங்கள் இல்லை. எமது தலையீடு மிகவும் சிக்கலானது என்கின்றன புதுடில்லி வட்டாரங்கள்- என்று அந்தப் பத்திரிகை தனது கட்டுரையில் தெரிவித்துள்ளது.

(அ-சி)

# வித்தியாதரனின் விடுதலையை வரவேற்கிறது எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு

## கோத்தபாயவை மன்னிப்புக் கோரவும் வலியுறுத்து

கொழும்பு, ஏப்.27

'உதயன்','சுடர் ஒளி' ஆசிரியர் என். வித்தியாதரனின் விடுதலையை எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு வரவேற்றுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட அதிகாரிகள் இவற்றுக்கான விளைவுகளுக்கும், பத்திரிகையாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும் மன்னிப்பு கோரவேண்டுமெனவும் அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெப்ரவரி 26ஆம் திகதி முதல் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியர் என். வித்தியாதரன் விடுதலை செய்யப்பட்டதை எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு வரவேற்கிறது.

கொழும்பு நீதிமன்றமொன்று அவரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது.

விசாரணைகளுக்குப் பொறுப்பாகவிருந்த கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவும், பொலிஸ் இராணுவமும் பத்திரிகையாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரங்களுமில்லையெனத் தெரிவித்துள்ளன.

கடந்த இரு மாதங்களாக விசாரணையாளர்கள், பத்திரிகையாளர் தொடர்பான நூற்றுக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் குறித்து ஆராய்ந்துள்ளனர். பொலிஸார் அவரது வங்கிக் கணக்குகளை ஆராய்ந்த போதிலும் விடுதலைப் புலிகளுடன் உள்ள தொடர்புகள் எதனையும் உறுதிசெய்ய முடியவில்லை.

அவர் சுதந்திர மனிதனாகத் தனது சட்டத்தரணி, குடும்பத்தினருடன் நீதிமன்றிலிருந்து வெளியே வந்தார்.

பொய்யான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர்கள் ஏன் என்னை இரு மாதங்கள் தடுத்து வைத்தனர் என கேள்வியெழுப்பினார். அனைத்து பொலிஸ் பிரிவும் ஏன் இராணுவப் புலனாய்வுப் பிரிவும் கூட எனது தொலைபேசி அழைப்புகளையும் வங்கிக் கணக்குகளையும் ஆராய்ந்த பின்னர் நான் குற்றமற்றவர் என உறுதி செய்தனர் என்று அவர் தெரிவித்தார். நீதித்துறை வித்தியாதரனை விடுதலை செய்யத் தீர்மானித்தமை சாதாரணமான விடயம். இது ஒன்றரை வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மற்றுமொரு தமிழ் பத்திரிகையாளர் ஜே.எஸ். திஸநாயகத்தின் விடுத லைக்கும் வழி வகுக் குமென எதிர் பார்க்கிறோம் - என்றுள்ளது. (அ-சி)

# மேல் மாகாணசபை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்கு ஒரு ஆசனமும் கிடைத்துள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 57.78 வீத வாக்குகளைப் பெற்றுள்ளதுடன் (5,30,370)25 ஆசனங்களை வென்றுள்ளது.

கொழும்பில் சிறுபான்மை சமூகத்தினர் அதிகமாக வாழும் கொழும்பு கிழக்கு, கொழும்பு மேற்கு, வடக்கு, மத்தி மற்றும் பொரளைத் தொகுதிகளை வென்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி 35.69 வீத வாக்குகளைப் பெற்று (2,36,256) 15 ஆசனங் களைக் கைப்பற்றியுள்ளது.

கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் 70 வீத வாக்குகளைப் பெற்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மிகத் தெளிவான வெற் றியைப் பெற்றுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் அனைத்து 13 தொகு திகளையும் வென்றுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அதே போன்று களுத்துறையிலும் 8 தொகுதிகளையும் வென்றுள்ளது.

கம்பஹாவில் 27 ஆசனங்களுடன் (6,907) களுத்துறையில் 14 (70%)அரச கூட்டமைப் பிற்குக் கிடைத்துள்ளன.

ஐ.தே.கட்சி கம்பஹாவில் 10 ஆசனங்களையும், களுத்துறையில் 5 ஆசனங்களையும் பெற்றுள்ளது.

### ஒரே பார்வையில் மேல் மாகாண சபை தேர்தல்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 15,06,115 | 64.74 | 68 |
| ஐ.தே.கட்சி | 6,88,253 | 29.58 | 30 |
| ஜே.வி.பி. | 56,384 | 2,42 | 3 |
| மு.காங்கிரஸ் | 49,388 | 2.12 | 2 |
| ஐ.ஐ.கூ | 11,970 | 0.51 | 1 |
| செலுத்தப்பட்ட வாக்குகள் | | 23,26,886 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 88,993 | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | | 24,15,879 | |

### தவறி விட்டது

பெரிய தம்பிரான் வீதி, இமையாணன், உடுப்பிட்டி என்ற விலாசத்தை உடைய பாலசிங்கம் வரதராஜாவின் (682851090v) அடையாள அட்டை தாவடி, பத்திரகாளி கோயிலடியில் 25.04.2009 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பா.வரதராஜா, வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும்.

### மரண அறிவித்தல்

**குமாரசுவாமி ஞானசுப்பிரமணியம்**



(வரைவாளர் - ஞானம்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசுப்பிரமணியம் 25.04.2009 சனிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - நேசமலர் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லையா - மகாலெட்சுமியின் அன்பு மருமகனும் வசுந்தராதேவியின் (செல்வராசாத்தி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற அன்னம் மற்றும் ராசம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற நயில்ஸ் மற்றும் ஆறுமுகம் ஆகியோரின் மைத்துனரும் மகால், சுதா, சலா, சசி, சுட்டா, முருகவேல்(வேல்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரகுமார், சிவா, நகுல், சிறிஸ், ஜெபன், அஜந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் கிறேஷயன், ஷாமினி, கேஷினி, அஸ்வினி, ஜோன், ஏரன், திமத்தி, இலக் கியன், காவியன், சத்தியன், கிஷானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4.30 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி.

தகவல்:
வசுந்தராதேவி
(மனைவி - ராசாத்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுநாளும் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் 32 பேர் மரணம்; 48 பேர் படுகாயம் அடைந்தனர்

கொழும்பு, ஏப்.27

முல்லைத்தீவு மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதி மீது நேற்று முழுநாளும் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் 32 பேர் கொல்லப்பட்டனர்; 48 பேர் காயமடைந்தனர் என இணையத் தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நேற்றைய தாக்குதல் குறித்து இணையத் தளங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாதுகாப்பு வலய பகுதி மீது நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கும் பின்னர் 10.15 மணிக்கும் மீண்டும் 11 மணிக்கும் விமானப்படையினர் குண்டுத் தாக்குதல்களை நடத்தினர்.

முற்பகல் 11 மணிவரை விமானங்கள் 38 குண்டுகளை வீசியுள்ளது. மிக், கிபீர் மற்றும் எஃப்-7 ரக விமானங்கள் மாறி, மாறி வந்து குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இத்தாக்குதல்களில் 32 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 48-க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். பெருமளவிலான மக்களின் கூடாரங்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

மக்கள் வாழ்விடங்கள் மீது விமானப் படை தொடர்ச்சியாக குண்டுகளை வீசி வருவதால் மக்கள் பேரவலத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர் - என்றுள்ளது.

## இடம்பெயர்ந்தோரை வவுனியாவில் சந்திப்பார் ஜோன் ஹோம்ஸ்

கொழும்பு, ஏப்.27

கொழும்பு வந்துள்ள ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் இன்று வவுனியாவில் இடம்பெயர்ந்த மக்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிவார்.

அவர் வவுனியாவுக்குச் சென்று அங்குள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களைச் சந்திக்க இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## முள்ளிவாய்க்காலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குலில் கடற்புலிகளின் மூன்று படகுகள் அழிக்கப்பட்டன. அதிலிருந்த கடற்புலிகள் 12 பேர் உயிரிழந்தனர் என்றும் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

எனினும் இந்த மோதல்களில் கடற்படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் எதுவும் நேற்று இரவு வரை வெளியிடப் படவில்லை. (அ-சி)

## வலைஞர்மடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் 23 உறுப்பினர்கள் சரணடைந்தனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

அதேவேளை அம்பலவன்பொக்கணைப் பகுதியைச் கைப்பற்றும் நடவடிக்கைகளை நேற்றுக் காலை இராணுத்தினர் ஆரம்பித்துள்ளனர் என்றும் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

## போர் நிறுத்தம் என்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியதுதான் தற்போது அவர்கள் செய்ய வேண்டியது. அரசின் தரப்பிலிருந்து பேச்சுவார்த்தைகளுக்கோ அல்லது மோதல் நிறுத்தம் என்கிற பேச்சுக்கோ இடமில்லை.

போர் நிறுத்தத்துக்கு எந்தவொரு தேவையும் இல்லை. விடுதலைப் புலிகள் சரணடைய வேண்டும். அவர்கள் எம்முடன் சண்டையிடவில்லை; எம்மிடம் இருந்து ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

நடந்து சென்று நெருங்கக் கூடிய நிலையில் இலங்கை இராணுவம் இருக்கும் நிலையில், போர் நிறுத்தம் என்பது இந்தத் தருணத்தில் தேவையற்றது. விடுதலைப் புலிகள் சரணடைவதன் மூலம் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டுள்ள அவர்கள் அங்கு மேலும் பல பொதுமக்களின் உயிர்கள் பலியாவதைத் தடுக்க முடியும்.

சர்வதேச சமூகம் தமது அரசிடம் போர் நிறுத்தம் தொடர்பான அழுத்தங்களை கொடுப்பதை விட்டு, விடுதலைப் புலிகளை சரணடையச் சொல்லுமாறு செய்ய வேண்டும். இது தொடர்பில் சர்வதேச சமூகம் இரட்டை நிலையை கையாள்கிறது.

### உணவுப்பொருள் வழங்குவதைத் தடுக்கவில்லை

ஒரு பயங்கரவாத அமைப்பை எதிர்த்து போராடி வரும் எமது அரசு அவர்களுடன் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடாது. அது மிகவும் தெளிவானது. வடக்கே போர் நடக்கும் பகுதிகளில் இருக்கும் மக்களுக்கான உணவு மற்றும் இதர நிவாரணப் பொருள்கள் வழங்கும் நடவடிக்கையை தாம் தடுக்கவில்லை. மாறாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவுக்கும் மற்றும் உலக உணவுத் திட்டத்தினருக்கும் நிவாரண நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு வேண்டியுள்ளோம்.

இன்னமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் சுமார் 15,000 மக்களே இருக்கிறார்கள். முல்லைத்தீவு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் தெரிவித்த 1,65,000 எனும் கணக்கீடு தவறானது. .அதிகாரி கூறியுள்ளவை பொய். - என்றார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய. (அ)

## நேற்று 12 தடவைகள் விமானத் தாக்குதல்கள்!

கொழும்பு, ஏப்.27

முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் நேற்றுக் கடும் ஷெல் தாக்குதல்களும், விமானத் தாக்குதல்களும் நடைபெற்றதாகவும் இதனால் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளதாக முள்ளிவாய்க்கால் வைத்தியசாலை டாக்டர் வி.சண்முகராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நேற்று 12 தடவைகளுக்கும் அதிகமான தடவைகள் விமானத்தாக்குல்கள் நடைபெற்றன. அதிகளவில் ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றன.

நேற்று நடைபெற்ற தாக்குதல்களில் 154 பேர் காயமடைந்தோர் கொண்டுவரப்பட்டனர். இறந்தவர்களில் 15 சடலங்களும் கொண்டுவரப்பட்டன. ஆனால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதைவிட அதிகமானது. தற்போது காயமடைந்த 500 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர்.

முள்ளிவாய்க்கால் வைத்தியசாலை பாடசாலை ஒன்றிலேயே இயங்கி வருகின்றது. இப்போது அந்த வைத்திய சாலைப் பகுதியின் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. சிகிச்சையளிப்பதற்கான மருந்துகளும் இல்லை. இதனால் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது - என்றார். (அ-6)

## போர் நிறுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக தமது கரிசனையை ஜனாதிபதிக்கு தெரிவித்த பிறவுண், போர் நிறுத்தத்தின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார் என பின்னர் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களின் மறுவாழ்வுப் பணிக்காக 3.6 மில்லியன் டொலர்களை வழங்குவதாகவும் பிரதமர் கோர்டன் பிறவுண் உறுதி கூறியுள்ளார். (அ-1)

## மனிதாபிமான போர் நிறுத்தம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குப் பாரிய இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது என்பதனை அரச தலைவர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜோன் ஹோம்ஸ் அரச அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்கவை ஞாயிற்றுக்கிழமை சந்தித்தார். ஏனைய தலைவர்களையும் அவர் சந்திக்கவுள்ளார்.

விடுதலைப் புலிகள் எஞ்சியிருக்கின்ற பொதுமக்கள் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும். ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மோதலிலிருந்து தப்பிய மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களைதாம் பார்வையிடப் போகிறார் எனவும் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் எங்கிருந்தாலும் அங்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். அவர்களை சோதனையிடும் நடவடிக்கைகள் பகிரங்கமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இச் சந்திப்பு குறித்து மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறுகையில்:-

வடக்கில் நடைபெறும் மனிதாபிதான நடவடிக்கைகள் தொடர்பாக ஐ.நாவின் மனிதாபிமான செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸுக்கு தான் விளக்கமளித்ததாகவும் இடம்பெயர்ந்து வரும் மக்களுக்கு ஐ.நாவின் நிவாரண உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் பெறுவதற்குசாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார். (அ-சி-6)

## சர்வதேச தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடமில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த வெற்றியை பெற்றுக் கொடுத்த அனைத்து மக்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றதையடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (அ)

## பிரிட்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கார அமைச்சர் பேனாட் கொஷ்னர், சுவீடன் வெளிவிவகார அமைச்சர் ஹாம் பில்ட் ஆகியோரே இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர் என பிரிட்டிஷ் பிரதமர் அலுவலகச் செய்திகள் தெரிவித்தன.

மேற்குலக நாடுகளின் மூன்று முக்கிய வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கைக்கு ஒன்றாக விஜயம் மேற்கொள்வது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## மனிதப் பேரவலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை இணையத்தளங்கள் மூலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வன்னியில் ஏற்பட்டுள்ள மனிதப் பேரவலத்தைத் தடுத்து நிறுத்தவும், இந்த பேரவலத்தைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபை, ஜி-8, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் விடுக்கும் வேண்டுதல்களை ஏற்றும் நேற்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை பிரகடனப்படுத்துகின்றனர்.

இதனடிப்படையில் நாம் அனைத்து வலிந்த தாக்குதல் நடவடிக்கைகளையும் காலவரையறையற்ற முறையில் இடைநிறுத்துவதற்கு முடிவு செய்துள்ளோம்.

அரச படைகள் வன்னியில் தொடர்ந்து நடத்திவரும் அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களுக்கு முரணான போர் நடவடிக்கைகளினால் எமது மக்கள் அனுபவிக்கும் துன்பம் அதியுச்ச அளவினை எட்டியுள்ளது.

ஒருபுறம் முல்லைத்தீவு கரையோரங்களில் உள்ள எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளை சுற்றிவளைத்து குவிக்கப்பட்டுள்ள சிங்கள முப்படைகளினதும் தாக்குதல்களுக்குள் அகப்பட்டுள்ள ஒரு லட்சத்து 65 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் நாளாந்தம் ஷெல் வீச்சு, வான் குண்டுத் தாக்குதல் மற்றும் பலவித போர் அச்சுறுத்தல்களுக்குள்ளாகி உயிரிழப்புக்களையும், படுகாயங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

### உணவு, மருந்து வழங்கல்கள் அரசினால் இடைநிறுத்தம்

கடந்த பல மாதங்களாகத் திட்டமிட்ட முறையில் அரசினால் இம் மக்களுக்கான உணவு, மருந்து மற்றும் பல மனிதாபிமான வழங்கல்கள் இடைநிறுத்தப்பட்டமையால் அங்கு பட்டினி அபாயம் ஏற்பட்டுள்ளது.

மறுபுறம், இப்பகுதிகளில் இருந்து பல வழிகளிலும் வெளியேறிய போது சிங்களப் படையினரிடம் அகப்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் அனைத்துலக விதிகளுக்கு முரணாக தடுப்பு முகாம்களிலும், இராணுவ வதைமுகாம்களிலும் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இம்மக்கள் அனைத்துலக விதிகளுக்குட்பட்ட பாதுகாப்பு, மனிதாபிமான உதவிகள் கிடைக்கப்பெறாது துன்புறுத்தப்படுகின்றனர். அவர்கள் சொந்த இடங்களுக்குச் சென்று குடியமர்வதற்கு படையினர் அனுமதிக்காமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையினால் அந்த மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

மேலும், போர்முனைகளுக்குள் இவ்வாறு அகப்பட்ட மக்களின் ஒருபகுதியினர் கொண்டு வரப்பட்டு மனிதக் கேடயங்களாகப் பாவிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

### வழங்கல் வழிகளை ஏற்படுத்த ஒத்துழைப்போம்

இந்தப் பின்னணியில், ஐ.நா. இப்பகுதிகளுக்கு மனிதாபிமான வழங்கல் வழிகளை ஏற்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சிகளை நாங்கள் வரவேற்பதுடன் இம் முயற்சிகளுக்கான ஒத்துழைப்புகளை முழுமையாக வழங்கத் தயாராகவுள்ளோம்.

மேலும் ஜி-8 நாடுகளின் வெளிவிவகாரத் துறை அமைச்சர்கள் வெளியிட்ட கூட்டறிக்கை, வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கை, இந்திய அமைச்சர்கள் வெளியிட்ட அறிக்கைகள், ஐரோப்பிய ஒன்றியத்தின் அழைப்பு என்பனவற்றை நாங்கள் கவனத்தில் எடுத்துள்ளோம்.

இன்று ஏற்பட்டுள்ள வன்னிப் பேரவலங்களை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வந்து மக்களின் இழப்புகளை நிறுத்தி மனிதாபிமான வழங்கல்களை விநியோகிப்பதனை உறுதிப்படுத்துவதற்கு போர் நிறுத்தப்பட்ட சூழல் அவசியமானது என்கின்ற அனைத்துலக சமூக வேண்டுதல்கள் மிகவும் முக்கியமானது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

இதற்கான முதல் முக்கிய படியாக நாங்கள் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்த அறிவிப்பை இன்று விடுக்கின்றோம். அரசும் இத்தகையதொரு போர்நிறுத்த ஏற்பாட்டிற்கு உடன்படுமாறு அனைத்துலக சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறான போர் நிறுத்த ஏற்பாடானது மனிதப் பேரவலத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதுடன் இன்றுள்ள மனிதப் பேரவலத்தின் பின்விளைவுகள் இலங்கைத் தீவின் மக்கள் சமூகங்கள் மீதும், பிராந்தியம் மீதும் ஏற்படுத்தக்கூடிய நீண்டகால சிக்கல்களுக்கும் முடிவுதரும் வழியைத் திறக்கும் என்று நம்புகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)


வீடு வாடகைக்குத் தேவை

வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் பாவனைக்கு யாழ்.நகரை அண்டிய பகுதிகளிலும் குறிப்பாக நாவலர் வீதி, பிறவுண் வீதி, கே.கே.எஸ். வீதி ஆகிய இடங்களில் உள்ள வீடு ஒன்று வாடகைக்கு உடன் தேவை. வடகைக்குத் கொடுக்க விரும்புவோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 060 221 6433
0777 110862

குறிப்பு:- உங்களால் எமக்கு வாடகைக்கு தரப்படும் வீட்டினை மிகச் சிறப்பாக எம்மால் பராமரிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சொற்ப பிரதிகளே
பூபாலசிங்கம் புத்தகசாலை

CHEMISTRY => S.Vasu
A/L 2009 DAY Paper Class
ஆரம்பம்:- 28.04.2009 (Tue) 5.30 p.m
Tue, Wed, Thr, Sat, Sun (5.30-6.30 p.m)
NAVALAR Anaipanthy, Jaffna.

CHEMISTRY => S.Vasu
மின் இரசாயனம்
ஆரம்பம்:- 29.04.2009
Wed 4.30 p.m
[Wed, Thur, 4.30-5.30 p.m]
NEC

Paper Class இன்று ஆரம்பம்
வாரத்தில் மூன்று நாள்கள் மாலை 6.15-7.15
O/L DAY CLASS நடைபெறுகிறது.
இம்மாதக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org